பக்கங்கள்:14 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 25 ஞாயிற்றுக்கிழமை 10.07.2022 கதிர் 247

### இனி இது ரகசியம் அல்ல!

கடைசியில் ராஜினாமா செய் வதற்கு - பதவி விலகுவதற்கு - இணங்க-வேண்டிய கட்டாயத் துக்கு வந்து விட்டார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ. ஆனால், அது 13 ஆம் திகதி புதன்கிழமை அன்றுதான். அது என்ன பதவி விலகுவதற்கு நல்ல ☞2



# வரலாறு காணாத பெரும் எழுச்சிப் போராட்டம்; ஜனாதிபதி மாளிகை, செயலகம் மக்கள் வசம்!

கோட்டாபய அரசுக்கு எதி ரான மாபெரும் மக்கள் தன்னெ ழுச்சிப் போராட்டம் நேற்று வரலாறு காணாத வகையில் உக்கிரமடைந்து பெருந்திரளா னோர் ஜனாதிபதி மாளிகைக் குள்ளும் ஜனாதிபதி செயலகத் துக்குள்ளும் பிரவேசித்து அந் தப் பகுதிகளைத் தமது முழுமை யான கட்டுப்பாட்டுக்குள் வைத் துள்ளனர்.

நாட்டு மக்கள் எதிர்கொண் டுள்ள பிரச்சினைகளுக்குக் கார ணமான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்ட ☞2

# ஜூலை 13ஆம் திகதி கோட்டா பதவி துறப்பு

## அவர் அறிவித்தார் என்று சபாநாயகர் தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 10

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்வரும் புதன் கிழமை (ஜூலை 13ஆம் திகதி) பதவி விலகு கின்றார் என்று அறிவித்துள்ளார்.

தமக்கு இவ்விடயம் தொடர்பில் ஜனாதிபதி அறி வித்துள்ளார் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன காலைக்கதிரிடம் தெரிவித்தார். ☞2

### ஜனாதிபதி ஊடகப்பிரிவு பணிப்பாளரும் விலகல்!

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சுதேவ ஹெட்டிஆராச்சி, அந்தப் பதவி யில் இருந்து இராஜிநாமா செய் வதாக அறிவித்துள்ளார்.

இந்நிலையில், அவர் தனது இராஜிநாமாக் கடிதத்தை ஜனா திபதியின் செயலாளர் காமினி செனரத்திடம் கையளித்துள்ளார்.

### ஜூலை 18ஆம் திகதியே பாடசாலை மீள ஆரம்பம்

இலங்கையில் நிலவும் எரி பொருள் நெருக்கடி நிலைமை யைக் கருத்தில்கொண்டு அனைத் துப் பாடசாலைகளுக்கும் விடு முறையைமேலும்ஒருவாரம்நீடிக் கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஜூலை 18ஆம் திகதி பாடசாலைகள் மீள ஆரம் பமாகும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

நேற்று கல்வி அதிகாரிகள் கூடிய இது தொடர்பில் தீர்மா னித்துள்ளனர்.

### பந்துலவும் இராஜிநாமா

#### மொட்டு 'கட்சி'யில் இருந்தும் விலகல்

போக்குவரத்து, வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் பந் துல குணவர்தன, தான் வகித்து வந்த அமைச்சுப் பதவியை நேற்று இராஜிநாமா செய்துள் ளார். ☞14

### ஊடகவியலாளர்கள் 6 பேர் மீது தாக்குதல்

பிரதமர் ரணில் விக்கிரமசிங் கவின் இல்லத்துக்கு அருகில் நேற்று மாலை 'நியூஸ்பெஸ்ட்' ஊடகவியலாளர்கள் 6 பேர் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட் டுள்ளது.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் ஆகியோர் ஊடகவியலாளர்க ளைத் தாக்கியுள்ளனர்.

ஜூடின் சிந்துஜன், ஜனித்த மெண்டிஸ், வர்ண சம்பத், சரசி பீரிஸ் ஆகிய 'நியூஸ்பெஸ்ட்' ஊடகவியலாளர்கள் ☞14

### ரணிலின் இல்லத்துக்குத் தீ வைப்பு



கொழும்பு, கொள்ளுபிட்டியில் அமைந்துள்ள பிர தமர் ரணில் விக்கி ரமசிங்கவின் தனிப் பட்ட இல்லத்துக்குத் தீ வைக்கப்பட்டது.

நேற்று மாலை பிரதமரின் ☞2



### கோட்டா, ரணில் உடனே பதவி விலக வேண்டும்

#### மைத்திரி வலியுறுத்து

ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவும் மக்களின் வேண்டு கோளின் பிரகாரம் உடனடியாகப் பதவி விலக வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான ☞14

### ஆர்ப்பாட்டத்தில் காயமடைந்த 56 பேர் வைத்தியசாலையில்!



கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகைக்கு அருகில் நேற்று முன் னெடுக்கப்பட்ட ஆர்ப் பாட்டத்தின்போது காய மடைந்த 56 பேர் கொழும்பு தேசிய வைத்திய ☞2

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாள் பார்க்கின்றார்? விலகுவது என்றால் உடனே பதவியை ஒப்படைத்து விட்டுப் போவதுதானே? அதற்கிடையில் இந்த மூன்று நாள்கள் செல்லாக் காசாகப் பதவியில் ஒளித்து ஒட்டிக் கொண்டிருந்து என்ன வெட்டிப் பிடுங்கப் போகின்றார் அவர் என்ற கேள்விகள் எழுகின்றன.

சபாநாயகர் உட்பட சம்பந்தப்பட்ட தரப்புகள் கேட்டுக்கொண்டதற்காகவே இந்த மூன்று, நான்கு நாள்கள் அவகாசம் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

அதற்கிடையில் கோட்டாபய ராஜபக்ஷ இரண்டு விடயங்களைச் செய்ய வேண்டியவராய் இருக்கின்றார்.

ஒன்று – தன்னுடைய எதிர்காலப் பாதுகாப்புத் தொடர்பில் சில விடயங்களை அவர் செய்ய வேண்டும்.

அடுத்தது – அரசியல் ரீதியாக சில முக்கிய நடவடிக்கைகளை அவர் முன்னெடுத்து நிறைவேற்ற வேண்டியிருக்கிறது.

பாதுகாப்பைப் பொறுத்தவரை யுத்த குற்றங்கள் போன்ற கடந்த காலச் சிக்கல்கள் சில அவருக்கு உள்ளன. தவிரவும், இப்போது அரசியலால் அவர் சம்பாதித்துக் கொண்டுள்ள சில நெருக்கடிகளும் உள்ளன. எனவே, எங்கு, எப்படி, என்ன மாதிரி தமது எதிர்காலத்தை அமைத்துக் கொள்வது என்ற தீர்மானத்தை எடுத்து, அதற்கேற்ப சில விடயங்களுக்கு அவர் முன் ஆயத்தம் செய்ய வேண்டியுள்ளது. ஜனாதிபதி என்ற பதவி நிலை அதிகாரத்தைப் பெயருக்கேனும் அவர் தக்க வைத்திருந்தால் தான் அவற்றை அவர் செய்ய முடியும் என்று கருதப்படுகின்றது. அது யதார்த்தமும் கூட.

அடுத்தது – அரசியல் ரீதியான சில விடயங்களை அவர் செய்து முடிக்காமல் ராஜினாமாச் செய்தால் மேலும் நெருக்கடிகள் ஏற்படும் எனச் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

இன்றைய நிலையில் கோட்டாபய ராஜினாமா செய்தால், பிரதமர் என்ற முறையில் அடுத்த ஜனாதிபதியாகப் பதவியேற்கும் சட்ட அதிகாரம் ரணிலுக்கு தானாகவே வந்துவிடும். கோட்டாபய ராஜினாமாச் செய்யும்போது அல்லது அதற்கு முன்னர் தாம் ராஜினாமாச் செய்வார் என்ற இணக்கத்துக்கு ரணில் இன்னமும் வரவில்லை. இசகு பிசகு பண்ணிக்கொண்டு, இழுபறிச் சிக்கல்களை ஏற்படுத்தியபடி அவர் இருக்கின்றார். நேற்று சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் தெளிவான பதில் ஒன்றைச் சொல்லாமல் இழுத்தடித்து குழப்பமான நிலைப்பாட்டையே ரணில் வெளிப்படுத்தி நின்றார் என்பது கவனிக்கத்தக்கது. அவரின் வீடெரிப்புச் சம்பவம் அதன் தொடர்வினைதான்.

ரணிலின் இந்த நிலைப்பாட்டால் சம்பந்தப்பட்ட தரப்புகள் உஷார் அடைந்துள்ளன. கோட்டாபயவுக்கு 13ஆம் திகதி வரை ஜனாதிபதியாக நீடிக்க காலக்கெடு கொடுத்திருப்பது என்பது உண்மையில் ரணில் பிரதமர் பதவியை ராஜினாமா செய்வதற்கு கொடுக்கும் காலக்கெடுதான்.

பிரதான கட்சிகள் எல்லாம் ஒன்று கூடி சர்வ கட்சி அரசுக்கான இணக்கத்தை கண்டு, பிரதமர் ஒருவரைத் தீர்மானித்து அறிவித்ததும், ஜனாதிபதி கோட்டாபய தற்சமயம் பிரதமர் பதவியில் இருக்கும் ரணிலை அப்பதவிலிருந்து வெளியேற்றி அறிவிப்பு விடுப்பார். அதன் பின்னர் இணக்கம் காணப்பட்ட பொதுவான நபரைப் பிரதமராகப் பதவிப்பிரமாணம் செய்து வைக்க முன்னர் தான் ராஜினாமாச் செய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரதமர் ஒருவர் இல்லாத நிலையில் ஜனாதிபதி தனது பதவியை ராஜினாமாச் செய்தால் சபாநாயகர் தற்காலிகமாகப் பதில் ஜனாதிபதியாவார்.

பொது இணக்கத்தில் தெளிவாகும் பிரதமர் அச்சமயத்தில் பிரதமர் பதவியை ஏற்பார். அதேவேளை பதில் ஜனாதிபதியாக பதவியேற்கும் சபாநாயகர் அடுத்த 30 நாள்களுக்குள் நாடாளுமன்றம் இணக்கம் காணும் ஒருவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்வதற்கு ஏற்பாடு செய்வார். அதுதான் சட்டத்தின் உள்ள ஒழுங்கும் கூட. இதுவே இப்போதைக்கு இணக்கம் காணப்பட்ட ஏற்பாடு என்கின்றன சம்பந்தப்பட்ட வட்டாரங்கள்.

பிரதமர் பதவியில் இருந்து ரணிலை வெளியேற்றி, பொது இணக்கத்தில் தெரிவாகும் ஒருவரை பிரதமர் ஆக்குவதற்கான ஒழுங்கைசெய்து முடிப்பதற்காகவே தமது ஜனாதிபதி பதவியில் 13 ஆம் திகதி வரை கோட்டாபய நீடிக்க இணங்கப்பட்டுள்ளது எனச் சம்பந்தப்பட்ட வட்டாரம் ஒன்று தகவல் தெரிவித்தது

அடுத்து, ஒரு கேள்வி எழுகின்றது. நேற்று வரை நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையை மொட்டுக் கட்சி – பொதுஜனபெரமுன – கொண்டிருந்தது. அப்படி இருக்கையில், அந்தக் கட்சியின் இணக்கம் இல்லாமல் சர்வ கட்சி அரசு ஒன்று சாத்தியமா, அதற்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை கிட்டுமா என்ற நியாயமான கேள்விதான் அது.

கோட்டாவுக்கு ஏற்பட்ட கதியோடு மொட்டுக் கட்சியே பொலபொலத்துப் போய்விட்டது. அதில் முப்பதுக்கும் குறையாத எம்.பிகள், இப்போது அடிக்கும் அரசியல் சூறாவளிக் காற்றில் அள்ளுப்பட்டு மொட்டு தரப்பிலிருந்து மாற்றுத் தரப்புக்குப் பாய்ந்துவிட்டனர் எனத் தெரிகிறது. மொட்டுக் கட்சி இனி, ‘கழுதை தேய்ந்து கட்டெறும்பான’ நிலையை நோக்கி நகர வேண்டியதுதான்.

தமிழர்களைப் பொறுத்தவரை அடுத்த முக்கியமான கேள்வி – சர்வகட்சி அரசில் தமிழ்க் கூட்டமைப்பு சேருமா என்பது. இது குறித்து சுமந்திரன், கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் ஐயாவோடு ஏற்கனவே பேசி உள்ளார். இன்றும் பேச்சு நடத்த உள்ளார் .

தமிழர் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் கூட்டமைப்பு தெரிவித்துள்ள யோசனைகளை கால வரையறை குறிப்பிட்டு நிறைவு செய்வோம் என்று சர்வ கட்சி அரசில் அங்கம் வகிக்கப் போகும் சகல கட்சிகளும் எழுத்தில் தந்தால் மட்டுமே சர்வ கட்சி ஆட்சிக்கு கூட்டமைப்பு வெளியில் இருந்து அல்லது அரசுக்குள் இருந்து கொண்டு ஆதரவு தரும். ஆனால் அமைச்சர் பதவிகள் எதையும் அது ஏற்காது. இதுதான் இன்றைய நிலையில் கூட்டமைப்பு தலைமையின் நிலைப்பாடு என்பதை உறுதி செய்ய முடிந்தது.

நாடாளுமன்றத்தில் சர்வ கட்சி அரசின் பெரும்பான்மை எண்ணிக்கையை உறுதிப்படுத்த கூட்டமைப்பின் பத்து ஆசனங்களும் இன்றியமையாதது என்பதால் கூட்டமைப்பின் நிபந்தனைக்கு இணங்க வேண்டிய கட்டாயம் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு இருப்பதாகக் கூட்டமைப்பு தலைமை கணக்கெடுத்திருப்பதாகத் தெரிகின்றது.

பல்வேறு கட்சித் தலைவர்களும் இன்று காலை கூடி அரசியல் நிலைமைகள் குறித்து ஆராய உள்ளனர். அப்போது நாட்டின் எதிர்கால அரசியல் நிலைமை ஓரளவு தெளிவாகும்.

அடுத்த ஆறு மாதத்திற்குள் தேர்தலை நடத்த உள்ள நிலையில் அதற்கு இடையிலான ‘இடைக்கால அரசு’ ஒன்றே இப்போது தேவைப்படுகிறது.

ஆகவே உத்தேச சர்வ கட்சி அரசில் கட்சி இலக்கு இல்லாமல், கட்சி நோக்கில் அரசியல் செய்யாமல், எல்லாத் தரப்புகளையும் அடுத்த ஆறு மாதத்திற்கு அரவணைத்துக் கொண்டு போகக்கூடிய பொதுவான இரு மூத்த பிரமுகர்களை ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவிக்கு தெரிவதற்கு கட்சித் தலைவர்கள் ஆலோசிக்கின்றனர் என தெரிகின்றது. அப்படி இந்த நாடாளுமன்றத்தில் யார் இருக்கின்றார்கள் என்பதுதான் கேள்வி.

எது, எப்படி என்றாலும் தோல்வி அடைந்த ஜனாதிபதியாக வெளியேற மாட்டேன் என்று அடம்பிடித்த கோட்டாபய, தோல்வி அடைந்து துரத்தப்பட்ட ஜனாதிபதியாக ஓடித்தப்பும் நிலைமை வந்திருக்கின்றது. அவர் கிளப்பிய பேரினவாதம், ‘ஒரு நாடு; ஒரே சட்டம்’ என்ற இனவாதத் திமிர் ஏற்பாடுகள், கொழுப்பு நடவடிக்கைகள் கூட, அவரைக் காப்பாற்ற வரவில்லை என்பது பேரினவாதத்தைக் கையில் எடுக்கும் அரசியல் காடையர்களுக்கு நல்ல பாடம் என்பது மட்டும் நிச்சயம்.

– மின்னல் –

## வரலாறு காணாத...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அரசு பதவி விலக வேண்டும் எனக் கோரி கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாகப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்தது.

இந்தப் போராட்டத்தின் இறுதித் தினமாக நேற்றைய தினத்தை அறிவித்து மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு பல நகரங்களிலிருந்து இரு தினங்களுக்கு முன்பே பேரணிகள் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், நேற்றுமுன்தினம் இரவு 9 மணிக்கு பொலிஸ் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது.

எனினும், பல்வேறு தரப்பினரின் கண்டனங்களுக்கு மத்தியில் நேற்றுக் காலை 8 மணியுடன் பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்துக்கான ஆதரவு மேலும் வலுப்பெற்றது.

பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டதை அடுத்து, நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பொதுப்போக்குவரத்து சேவைகள் ஊடாகவும், தனிப்பட்ட வாகனங்களிலும், கால்நடையாகவும் பெருமளவான மக்கள் கொழும்பு நோக்கிப் படையெடுத்தனர்.

பாதுகாப்புப் படையினரின் துப்பாக்கிச்சூடு, கண்ணீர்ப்புகைக் குண்டு வீச்சு மற்றும் நீர்த்தாரைப் பிரயோகத்தையும் பொருட்படுத்தாது, போராட்டக்காரர்கள் முன்னேறி கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டு அதைத் தங்கள் முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மிரிஹான இல்லத்தில் தங்கியிருந்த போதிலும், கடந்த மார்ச் மாதம் இறுதியில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தையடுத்து, கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகைக்கு அவர் சென்றிருந்தார்.

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ‘கோட்டா கோ கம’ போராட்டக்களத்தில் ஒன்றுதிரண்டிருந்த மக்களும், ஜனாதிபதி மாளிகைக்குள்ளும் ஜனாதிபதி செயலகத்துக்குள்ளும் பிரவேசித்தனர்.

கடந்த 91 நாட்களாக ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக, கட்சி பேதமின்றி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

நேற்று நாட்டின் பல்வேறு தரப்பினரும் ஒன்றுகூடிய நிலையில் அனைவரும் இணைந்து ஜனாதிபதி செயலகத்தையும் கைப்பற்றினர்.

பெருந்திரளான மக்கள், கட்சி பேதமின்றி ஒன்று திரண்டு ஜனாதிபதி உள்ளிட்ட அரசைப் பதவி விலகக் கோரி தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றனர்.

நேற்றுக் காலை முதல் மக்கள் சற்றும் தளராது தொடர்ந்தும் எதிர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

எவ்வாறாயினும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எங்கு தங்கியுள்ளார் என்று குறித்து இதுவரை எந்தவித தகவலும் வெளயாகவில்லை.

இதனிடையே, கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த சிதுரல மற்றும் கஜபாஹு எனும் கடற்படையினருக்குச் சொந்தமான இரண்டு கப்பல்களில் சிலர் பயணித்துள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது. ஹார்பர் மாஸ்டர் இதனை உறுதிப்படுத்தினார்.

பொதுமகன் ஒருவரால் எடுக்கப்பட்ட காணொளியில், சிலர் பாரிய பயணப் பொதிகளை கொண்டு செல்கின்றமை தெரியவந்தது.

கப்பல்களில் பயணித்தவர்கள் தொடர்பில் வினவியபோதிலும் அது தொடர்பிலான தகவல்களை வழங்க முடியாது எனக் ஹார்பர் மாஸ்டர் கூறினார்.

இதனிடையே, பொதுமக்களின் எதிர்ப்பு போராட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு சில மணித்தியாலங்களில் கொழும்பு கட்டுநாயக்க அதிவேக வீதியில் அதிசொகுசு வாகனங்கள் பயணிக்கும் காணொலிகள் சமூக வலைத்தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன.

ஆஸ்திரேலியாவிலிருந்து மூத்த சட்டத்தரணி செல்லத்துரை ரவீந்திரன் தினசரி வரையும் ‘யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத் திடல் வரை...!’ கட்டுரைத் தொடர் தவிர்க்க முடியாத காரணங்களால் இன்றும் நாளையும் வெளிவராது.

**- ஆசிரியர் -**

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இல்லத்துக்கு முன்னால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது, இல்லத்துக்குள் நுழைந்த குழுவொன்று அங்கே தீ வைத்தது.

இதனால் வீட்டுக்குக்குச் சேதம் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, பிரதமரின் இல்லத்துக்கு வெளியே நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பாதுகாப்புத் தரப்பினர் மோதினர். இதன்போது ஊடகவியாளர்களும் தாக்குதலுக்கு இலக்காகினர்.

---

## ஆர்ப்பாட்டத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அவர்களுள் மூவரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளதாக வைத்தியசாலையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். அவர்களில் ஒருவர் அதிதீவிர அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

காயமடைந்தவர்களில் 5 பெண்களும் அடங்குகின்றனர்.

பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த இருவரும் இதன்போது காயமடைந்துள்ளனர்.

---

## ஜூலை 13ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இது தொடர்பில் சபாநாயகர் மேலும் கூறுகையில்,

நேற்று மாலை நடைபெற்ற கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை ஜனாதிபதிக்கு உடனே எழுத்து மூலம் மின்னஞ்சல் ஊடாக உத்தியோகபூர்வமாக அறிவித்தேன்.

இதையடுத்து அமைதியாக ஆட்சியைக் கையளிப்பதற்கான இணக்கத்தை ஜனாதிபதி என்னிடம் தெரிவித்தார்.

எதிர்வரும் 13ஆம் திகதி பதவி விலகுகின்றார் என்றும் என்னிடம் அவர் அறிவித்தார்.

நாட்டில் அமைதி நிலவ வேண்டும் என அவர் எதிர்பார்க்கின்றார். எனவே, போராட்டக்காரர்கள் பொறுமை காக்க வேண்டும் – என்றார்.

இதேவேளை, சபாநாயகர் இல்லத்தில் நேற்று மாலை நடைபெற்ற கட்சித் தலைவர்களின் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. காலைக்கதிரிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

கட்சித் தலைவர்களின் கூடடத்தில் 5 முடிவுகள் எடுக்கப்பட்டன.

ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இருவரும் உடனே பதவி விலக வேண்டும், சபாநாயகர் இடைக்கால ஜனாதிபதியாக வேண்டும், 30 நாட்களுக்கு முன்பாகவே நாடாளுமன்றம் பதில் ஜனாதிபதியைத் தெரிவு செய்ய வேண்டும், சர்வகட்சி அரசை உருவாக்க வேண்டும், இவ்வருட இறுதிக்குள் புதிய மக்களாணை பெற நாடாளுமன்றத் தேர்தலை நடத்த வேண்டும் ஆகிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டன – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# அமைச்சுப் பதவியை கடாசினார் பந்துல!

## சுயாதீன எம். பியாக செயற்பட தீர்மானம்



போக்குவரத்து, வெகுசன ஊடகத்துறை அமைச்சுப் பதவியை பந்துல குணவர்தன இராஜிாமா செய்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில் தான் வகித்த போக்குவரத்து, வெகுசன ஊடகத்துறை அமைச்சுப் பதவியிலிருந்தும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்புரிமையில் இருந்தும் விலகி நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படவுள்ளேன் என பந்துல குணவர்தன தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.







### மணமகன் விபரம்

**பிறந்த திகதி**-21.06.1986
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-கேட்டை
**கி.பா**-36
**செவ்**-11ல்
**தகைமை**-TEX DRASS MEM
**தொழில்**-அரசசேவை
**எதிர்பார்ப்பு**- அரசசேவை தனியார் மணமகள்

**பிறந்த திகதி**-19.12.1980
**மதம்**-இந்து
**ஜாதி**-V சைவம் ஆண்
**நட்சத்திரம்**-பரணி5
**கி.பா**-6
**செவ்**-சூரி 3ல்
**தகைமை**-B.SC COMPUTER
**தொழில்**-COMPANY COLOMBO
**எதிர்பார்ப்பு**- -பட்டதாரி அரசசேவை தனியார் மணமகள்

**பிறந்த திகதி**-13.11.1991
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-உத்தராடம் 4
**கி.பா**-14
**செவ்**-சூரி2
**தகைமை**-I.T SOFTWARE ENG
**தொழில்**-U,S,A COMPANY
**எதிர்பார்ப்பு**- ENG DOCTOR மணமகள்தேவை

**பிறந்த திகதி**-28.01.1991
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-திருவாதிரை
**கி.பா**-31
**செவ்**-1ல்
**தகைமை**- M.B.B.S
**தொழில்**-DOCTOR
**எதிர்பார்ப்பு**- ENG DOCTOR மணமகள்

**பிறந்த திகதி**-18.03.1991
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-ரேவதி
**கி.பா**-10
**செவ்**-4ல்
**தகைமை**-M.B.B.S
**தொழில்**-DOCTOR
**எதிர்பார்ப்பு** - DOCTOR மணமகள்

**பிறந்த திகதி**-20.07.1985
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-ஆயிலியம்
**கி.பா**-4
**செவ்**-சூரி 12
**தகைமை**-B.A
**தொழில்**-அரசசேவை
**எதிர்பார்ப்பு**- அரசசேவை மணமகள்

**பிறந்த திகதி**-16.04.1985
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-சதயம் 4
**கி.பா**-9
**செவ்**-12ல்
**தகைமை**-B.S.C M.SC
**தொழில்**- U.S.A. PR
**எதிர்பார்ப்பு**- பட்டதாரி U.S.A மணமகள் இலங்கை

**பிறந்த திகதி**-20.08.1990
**மதம்**-இந்து
**ஜாதி**-V ஆண்
**நட்சத்திரம்**-ஆயிலியம் 4
**கி.பா**-25
**செவ்**-8ல்
**தகைமை**-ACCOUNTANT
**தொழில்**-UK ACCOUNTANT
**எதிர்பார்ப்பு**- UK-CEYLON மணமகள்

### மணமகள் விபரம்

**பிறந்த திகதி**-21.01.1983
**மதம்**-இந்து
**ஜாதி**-சைவம் V பெண்
**நட்சத்திரம்**-ரேவதி 4
**கி.பா**-28
**செவ்**-11ல்
**தகைமை**-B.A
**தொழில்**-COMPANY
**எதிர்பார்ப்பு**- தனியார் அரசசேவை மணமகன் (உத்தரம், அத்தம், சித்திரை(1,2) சுவாதி)

**பிறந்த திகதி**-25.05.1992
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-அனுசம் 1
**கி.பா**-25
**செவ்**-2ல்
**தகைமை**-B.S.C
**தொழில்**-பட்டதாரி ஆசிரியர்
**எதிர்பார்ப்பு**- ENG-DOCTOR அரச உயர் பதவி மணமகன்

**பிறந்த திகதி**-05.02.1995
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-ரேவதி
**கி.பா**-68
**செவ்**-7ல்
**தகைமை**-FINANCIAL ENG
**தொழில்**-ACCOUNTANT
**எதிர்பார்ப்பு**- வெளிநாடு PR மணமகன்

**பிறந்த திகதி**-24.08.2022
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-பரணி
**கி.பா**-55
**செவ்**-சூரி 1ல்
**தகைமை**-G.C.G A/L
**தொழில்**- .-
**எதிர்பார்ப்பு**-வெளிநாடு PR மணமகன்

**பிறந்த திகதி**-30.10.1997
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-சித்திரை 1
**கி.பா**-34
**செவ்**-4ல்
**தகைமை**-G.C.E A/L
**தொழில்**- -
**எதிர்பார்ப்பு**- UK. GERMANY, CANADA வெளிநாடு PR மணமகன்

**பிறந்த திகதி**-05.09.1997
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-அத்தம்
**கி.பா**-33
**செவ்**-4ல்
**தகைமை**-HND QS
**தொழில்**- QUANTRY SARVEYOR
**எதிர்பார்ப்பு**- உள்நாடு-வெளிநாடு பட்டதாரி மணமகன்

**பிறந்த திகதி**-08.12.1990
**மதம்**-இந்து
**ஜாதி**-V பெண்
**நட்சத்திரம்**-மகம்
**கி.பா**-24
**செவ்**-8ல்
**தகைமை**-M.B.B.S
**தொழில்**- DOCTOR
**எதிர்பார்ப்பு**- DOCTOR ENG மணமகன்

**பிறந்த திகதி**-02.10.1994
**மதம்**-இந்து
**ஜாதி**-விஸ்வகுலம்
**நட்சத்திரம்**-மகம்
**கி.பா**-40
**செவ்**-10ல்
**தகைமை**-M.B.B.S
**தொழில்**- DOCTOR
**எதிர்பார்ப்பு**- DOCTOR மணமகன் மட்டும்

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland- இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விபரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.

காலைக்கதிர் தொலைபேசி 021 222 3000

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விபரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.














காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## சிக்கல் இனித்தான்!

எதேச்சாதிகாரத்துக்கு எதிரான மக்களின் போராட்டம் வெற்றி பெற்று விட்டதாக முழக்கமிடப்படுகின்றது. நிலைமை அதுவல்ல.

உண்மையில் இவ்விவகாரத்தில் கால் கிணறு கூடத் தாண்டவில்லை என்பதுதான் யதார்த்தம். அது மாத்திரமல்ல. அந்தக் கால கிணறு தாண்டிய நிலையில் இருந்து மிகவும் மோசமான – பயங்கரமான – சூழலுக்குள் நாடு விழுந்து விடும் ஆபத்து இருப்பதும் மறுப்பதற்கில்லை. சதாம் ஹுசைன் வீழ்த்தப்பட்ட பின்னர் ஈராக் பட்ட பேரவஸ்தை, துன்ப, துயரங்கள் ஓர் உதாரணம்.

ஒரு சில லட்சம் பேர் கூடி ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிக்கை போன்றவற்றுக்குள் நுழைந்து விட்டால், ஆட்சி மாறிவிடும் என்று அர்த்தமல்ல.

இன்னும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது பதவியை இராஜினாமாச் செய்யவில்லை. அவர் தமது பதவி விலகலைத் தாமாக உத்தியோகபூர்வமாக இன்னும் அறிவிக்கவில்லை. பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் தமது பதவியை இராஜினாமாச் செய்பவராகத் தெரியவில்லை.

நேற்று மாலை சபாநாயகர் கூட்டிய சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நேரடியாகவும், 'சூம்' செயலி முறையிலும் பங்குபற்றிய தலைவர்களின் கோரிக்கையை ஏற்று ஜனாதிபதியும் அவருடன் சேர்ந்து பிரதமரும் முதலில் பதவி விலக வேண்டும். இப்போது அறிவிக்கப்பட்டபடி 13 ஆம் திகதி ஜனாதிபதி பதவி விலகினால், விடயம் முடிந்து விட்டது, எல்லாம் சுமுகமாக நடந்தேறும் என்று அர்த்தமல்ல.

அதற்குப் பின்னர்தான் உண்மையான சிக்கலே – சர்ச்சையே – இழுபறியே – ஆரம்பமாகும்.

சர்வகட்சி அரசு, தேசிய அரசு, நல்லிணக்க அரசு என்றெல்லாம் பேச்சுக்கு உரையாட நன்றாகத்தான் இருக்கும். ஆனால் செயலில் அதைக் கொண்டு வருவது என்பது நிச்சயம் மணலைக் கயிறாகத் திரிக்கும் வேலையாகத்தான் இருக்கும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி, மக்களாலேயே துரத்தப்படும் நிலையில் அந்த இடத்துக்கு தற்காலிக ஜனாதிபதியாகவோ – பதில் ஜனாதிபதியாகவோ – வருபவர் நிறைவேற்றதிகார ஜனாதிபதிக்குரிய அதிகாரங்களை பெற்றாலும், அரசியல் செல்வாக்கில் கயிற்றில் ஆட்டுவிக்கப்படும் பொம்மையாகவே இருப்பார்.

அதேசமயம், சஜித், மைத்திரி, விமல் வீரவன்ஸ போன்ற தரப்புகள் அடுத்தது நாங்கள்தான் என்று மார் தட்டி நிற்பார்கள். 'கோட்டா கோ கம'வை வெற்றிகரமாகப் பின்னின்று இயக்கியவர்கள் நாங்களே என்று குமார் குணரட்ணம் அணி அதற்குள் குசும்பு பண்ணும். தவிரவும் ஜே.வி.பி. மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போன்றவையும் தத்தமது கருத்து நிலைலைகளை வலியுறுத்தி ஒவ்வொரு நிலைப்பாட்டை எடுக்கும்.

சர்வகட்சி அரசில் அமைச்சுப் பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்களைப் பங்கிடுவதிலேயே சில்லெடுத்து, இதிலும் விட கோட்டா – ரணில் கூட்டு எவ்வளவோ மேல் என்று சொல்லும் நிலைமை வந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

இவ்வளவையும், நாடாளுமன்றத்தில் மிக அதிக உறுப்பினர்களைக் கொண்ட – ராஜபக்ஷக்களும் அடங்கிய – ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவையும் வைத்துக் கொண்டுதான் – இல்லை, சேர்த்துக் கொண்டுதான் முன்னெடுக்க வேண்டும்.

அப்படிப் பார்த்தால் இனித்தான் பிரச்சினையே – சிக்கலே – இருக்கப் போகின்றது என்பதுதான் நிஜம்.

## நாடாளுமன்றத்தின் ஊடாக பதில் ஜனாதிபதியை தெரிவு செய்க!

### சுயாதீன அரசியல் கட்சித் தலைவர்கள் சபாநாயகரிடம் வலியுறுத்தல்

கொழும்பு, ஜூலை 10

நாடு எதிர்கொண்டுள்ள பாரதூர தன்மையை உணர்ந்து நாடாளுமன்றத்தின் ஊடாக பதில் ஜனாதிபதியை தெரிவு செய்ய உடன் அவதானம் செலுத்த வேண்டும். மக்களின் எதிர்பார்ப்பிற்கமைய நாடாளுமன்றம் செயற்படாவிடின் மக்கள் நாடாளுமன்றத்தையும் முற்றுகையிடுவார்கள் என நாடாளுமன்றில் சுயாதீனமாக செயற்படும் அரசியல் கட்சி தலைவர்கள் சபாநாயகரிடம் கூட்டாக வலியுறுத்தியுள்ளளர் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

அரசாங்கத்துக்கு எதிரான மக்களின் அமைதி போராட்டம் நூற்றுக்கு நூறு வீதம் வெற்றி பெற்றுள்ளது. தனக்கு மக்களாணை இல்லை என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விளங்கிக்கொண்டு இனியாவது நாகரிகமான முறையில் பதவி விலக வேண்டும்.

பொது மக்கள் தங்களின் பொறுப்பை நிறைவேற்றியுள்ளார்கள். நாடாளுமன்ற மட்டத்தில் மக்கள் பிரதிநிதிகள் தங்களின் பொறுப்பை நிறைவேற்ற வேண்டும். நாடாளுமன்றத்தின் ஊடாக பதில் ஜனாதிபதியை தெரிவு செய்து மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்ற வேண்டும்.

நாடாளுமன்றத்தின் ஊடாக தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காணாவிடின் மக்கள் நாடாளுமன்றத்தையும் முற்றுகையிடுவார்கள் என்பதை 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் விளங்கிக்கொள்ள வேண்டும். ஆகவே, தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காண ஜனாதிபதி தவிர்த்து சகல தரப்பினரும் ஒன்றிணைய வேண்டும்.

மக்கள் போராட்டம் வெற்றிபெற்றுள்ளமை மகிழ்விற்குரியது. நாட்டு மக்கள் வன்முறையற்ற வகையில் ஜனநாயக ரீதியில் தங்களின் அடிப்படை உரிமைகளை வெளிப்படுத்தியமைக்கு மதிப்பளிக்கிறோம். – என்றார்.

## ஜனாதிபதி கோட்டாபயவுக்கு எதிராக களமிறங்கிய சிறப்பு அதிரடிப் படை வீரர்





கொழும்பில் இடம்பெற்றுகின்ற ஆர்ப்பாட்டத்தில் ஆயுதங்களை கீழே போட்டு விட்டு இராணுவ அதிகாரி ஒருவரும் இணைந் திருந்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை பதவி விலகக் கோரி நாட்டு மக்கள் பெருந்திரளாக ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் கோட்டாபயவுக்கு பாதுகாப்பு வழங்கும் நோக்கில் நிலைநிறுத்தப்பட்டிருந்த சிறப்பு அதிரடி படையை சேர்ந்த இராணுவ சிப்பாய் ஒருவர் மக்கள் போராட்டத்தில் இணைந்திருந்தார்.

மேற்படி இராணுவ சிப்பாயை ஆர்ப்பாட்டக்காரர்கள் கரகோஷம் செய்து இணைத்துக் கொண்டனர்.

## கர்ப்பிணித் தாய்மார்களையும் இம்புளுவன்ஸா தாக்குமாம்!

### அவதானம் தேவை என்கிறார் மகப்பேற்று வைத்திய நிபுணர்

தற்போது வேகமாகப் பரவி வரும் இன்புளுவன்சா வைரஸ், கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், குழந்தை பிரசவித்த தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதால் மிகவும் அவதானமாக இருக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. மகப்பேற்று மற்றும் மகளிர் மருத்துவ நிபுணர் சனத் லெனாரோல் இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

கர்ப்பிணித் தாய்மார்கள் முடிந்தவரை முகக் கவசம் அணியுமாறும், வைரஸ் பரவுவதைத் தவிர்ப்பதற்காக மேலும் மக்கள் நெரிசல் மிகுந்த இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

இந்த நாள்களில் காய்ச்சல் ஏற்படுமிடத்து உடனடியாக மகப்பேற்று மற்றும் மகளிர் மருத்துவ நிபுணரை சந்தித்து வைத்தியசாலையில் சேர்க்கவும். தாயும் குழந்தையும் கூடிய விரைவில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டால், அவர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளில் இருந்து பாதுகாக்கத் தேவையான சிகிச்சை அளிக்க முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## அதிகரிக்கும் எரிபொருள் நெருக்கடியால் விமானசேவை இரத்துசெய்யப்படமாட்டா!

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஸ்ரீலங்கன் விமான சேவையின் பல விமான சேவைகள் இரத்து செய்யப்படலாம் என வெளியாகும் தகவல்களை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் மறுத்துள்ளது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு உச்சத்தை எட்டியுள்ள நிலையில், நிலைமையை நிர்வகிப்பதற்கு விமான அட்டவணையில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன எனவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தெரிவு செய்யப்பட்ட வெளிநாட்டு விமான நிலையங்களில் எரிபொருளைப் பெறுவதற்கு தொழில்நுட்ப நிறுத்தங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய சில விமானங்களின் நேரம் மற்றும் கால அளவுகளில் சில மாற்றங்கள் ஏற்படக்கூடும்என ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தெரிவித்துள்ளது.

இந்த இக்கட்டான நேரத்தில், திட்டமிடப்பட்ட விமான நடவடிக்கைகளை எந்தவித இடையூறும் இன்றி இயக்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் எனவும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் குறிப்பிட்டுள்ளது.


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நாடு வங்குரோத்து நிலையை அடைந்ததற்கு ஜனாதிபதி தனிப்பட பொறுப்பேற்க வேண்டும்!

## இலங்கைத் திருச்சபை அறிக்கை

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் உடனடியாக பதவி விலகுமாறும் இலங்கை மக்கள் மற்றும் சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை மீளப் பெறக்கூடிய உண்மையான பிரதிநிதித்துவ இடைக்கால நிர்வாகத்தை உருவாக்குமாறும் இலங்கைத் திருச்சபை கோரிக்கை விடுத்துள்ளது.**

நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்றமைக்காக ஜனாதிபதி தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வேண்டும் என்று அந்தச் சபை அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

ஒருவர் மீது பொதுமக்கள் நம்பிக்கை வைத்திருந்தால் மட்டுமே அவரின் பதவிக் காலம் முறையானதாக இருக்கும் என்பதை ஜனாதிபதி நினைவில் கொள்ளவேண்டும்.

மதத் தலைவர்கள், குடியியல் சமூகம் மற்றும் தெருவில் இருக்கும் சராசரி ஆணும் பெண்ணும் அவர் பதவி விலக வேண்டும் என்று கோருவதைக் கொண்டு, இந்த நாட்டை இனி ஆட்சி செய்ய அவருக்கு எந்த ஆணையும் இல்லை என்பதைத் தெளிவாகப் பிரதிபலிக்கிறது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய சட்ட விரோத அரசாங்கம், நாட்டின் சீரழிந்து வரும் நிலை தொடர்பாக அவ்வப்போது விளக்கமளித்து, மோசமான நிலைக்குத் தயாராகுமாறு மக்களை எச்சரிப்பதில் மட்டுமே வல்லமை கொண்டுள்ளதாக இலங்கைத் திருச்சபை குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், அதிகாரத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் சுயநலவாதிகளால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் போராட்டத்தைத் தீவிரப்படுத்துவதைத் தவிர வேறு வழியில்லை.

ஒரு திருச்சபை என்ற வகையில், நமது நாட்டின் அர்த்தமுள்ள மாற்றத்துக்கு அழைப்பு விடுக்கும் வகையில், அமைதியான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் மக்களுக்கு ஆதரவளிப்பதாகவும் இலங்கைத் திருச்சபை குறிப்பிட்டுள்ளது.

### எரிபொருள் இறக்குமதிக்கு தேவையான டொலர்களை செலுத்த

# 2,170 கோடி ரூபாவை வழங்குமாறு திறைசேரியிடம் கோரிக்கை!

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், எரிபொருள் இறக்குமதிக்குத் தேவையான டொலர்களை செலுத்துவதற்காக திறைசேரியிடம் 2 ஆயிரத்து 170 கோடி ரூபாவைக் கோரியுள்ளது.

இந்தக் கோரிக்கை மத்திய வங்கிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், வழங்குவதா இல்லையா என்பது நாணயச் சபையால் தீர்மானிக்கப்படும் எனவும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு திறைசேரியிலிருந்து தேவையான பணத்தை வழங்கத் தவறினால், அதனை இலங்கை மத்திய வங்கி வழங்குவதற்கு நிதிச் சபையின் அனுமதி தேவை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாணயச் சபையின் அனுமதியுடன் கடந்த வாரம் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு மத்திய வங்கி 180 கோடியே 50 லட்சம் ரூபாவை வழங்கியதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கை எதிர்நோக்கியுள்ள பொருளாதார சவால்களை வெற்றி கொள்வதற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் உள்ளிட்ட பல அரச நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.





# முஸ்லிம் காங்கிரஸ் தலைவரை சந்தித்த காலிமுகத்திடல் போராட்டக் காரர்கள்!

காலிமுகத்திடல் போராட்டக்குழு ஏற்பட்டாளர்கள் சார்பில் வருகைதந்தவர்கள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் மற்றும் கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பர் ஆகியோரை கடந்த வியாழக்கிழமை மாலை 'தாருஸ்ஸலாம்'தலைமையகத்தில் சந்தித்தனர்.

நாட்டைச் சீரழித்து, அதல பாதாளத்தில் தள்ளியுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்கு அனுப்பும் பாரிய மக்கள் எதிர்ப்புப் போராட்டம் தொடர்பில் அவர்கள் விளக்கமளித்தனர்.

# சமூகவலைத் தளங்களை முடக்க தயாராகும் அரசு?

கொழும்பில் தொலைத்தொடர்பு சேவைகளை குரல் அழைப்புகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்துமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக வெளியாகும் செய்தி உண்மைக்கு புறம்பானது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஜயந்த டி சில்வாவால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் ஜனாதிபதியும் கேட்டறிந்துள்ளார் எனவும், அதனை தெளிவுபடுத்த வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், சமூக ஊடக வலையமைப்புகள் எந்த வகையிலும் தடை செய்யப்படாது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# சுகவீனமான குழந்தையை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்வதற்கு எரிபொருள் இல்லை!

## எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காத்திருந்த பெற்றோர்

சுகவீனமடைந்த தங்களது குழந்தையை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்ல எரிபொருள் இல்லாத நிலையில், குழந்தையின் பெற்றோர் எரிபொருள்நிரப்புநிலையத்தில் காத்திருந்த படம் வைரலாகி வருகின்றது. பண்டாரகம – பாணந்துறை வீதியிலுள்ள எரிபொருள்நிரப்புநிலையத்தில் இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது. இது தொடர்பாக அங்கு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பாதுகாப்பு தரப்பினரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. எனினும் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையியில் எரிபொருள் கையிருப்பு இல்லாத நிலையில், எரிபொருள் வரும் வரை குழந்தையின் பெற்றோர் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் காத்திருந்தனர். இதன்போது அங்கிருந்தவர்களால் எடுக்கப்பட்ட படம் தற்போது இணையத்தில் வைரலாகி வருகின்றது.



# யாழ்.-கிளிநொச்சி ரயில் சேவை வெளியானது நேர அட்டவணை!

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியால் யாழ்ப்பாணத்துக்கும், கிளிநொச்சிக்கும் இடையே எதிர்வரும் 11 ஆம் திகதி முதல் ஆரம் பிக்க விருக்கும் விசேட ரயில் சேவைக் கான நேர அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, காலை 6 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் இந்த ரயில், 6.40 மணிக்கு யாழ். ரயில் நிலையத்திலிருந்தும், 7 மணிக்கு சாவகச்சேரியிலிருந்தும், 7.12 மணிக்கு கொடிகாமத்திலிருந்தும் புறப்பட்டு பளையை 7.30 மணிக்கும், கிளிநொச்சியை 7.56 மணிக்கும், அறிவியல் நகர் ரயில் நிலையத்தை 8.05 மணிக்கும் வந்தடைந்து 8.11 மணிக்கு முறிகண்டியை அடையும்.

காங்கேசன்துறைக்கும், யாழ்ப்பாணத்துக்கும் இடையில், மாவிட்டபுரத்திலிருந்து 6.05 மணிக்கும், தெல்லிப்பழையிலிருந்து 6.09 மணிக்கும், மல்லாகத்திலிருந்து 6.14 மணிக்கும், சுன்னாகத்திலிருந்து 6.18 மணிக்கும், இணுவிலிலிருந்து 6.22 மணிக்கும், கோண்டாவிலிலிருந்து 6.27 மணிக்கும், கொக்குவிலிலிருந்து 6.31 மணிக்கும் புறப்பட்டு 6.35 மணிக்கு யாழ்ப்பாணத்தைச் சென்றடையும்.

யாழ்ப்பாணத்துக்கும், கிளிநொச்சிக்கும் இடையே, புங்கன்குளத்தை 6.44 மணிக்கும், நாவற்குழியை 6.50 மணிக்கும், தனங்கிளப்பை 6.54 மணிக்கும், சாவகச்சேரியை 7 மணிக்கும், சங்கத்தானையை 7.03 மணிக்கும், மீசாலையை 7.07 மணிக்கும், கொடிகாமத்தை 7.12 மணிக்கும், மிருசுவிலை 7.14 மணிக்கும், எழுது மட்டுவாளை 7.21 மணிக்கும் புறப்பட்டு பளையை 7.30 மணிக்கும் வந்தடையும். அங்கிருந்து ஆனையிறவை 7.42 மணிக்கும், பரந்தனை 7.50 மணிக்கும் வந்தடைந்து கிளிநொச்சியை 7.56 மணிக்கும் வந்தடையும்.

மீண்டும், காலை 10 மணிக்கு கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்படும் இந்த ரயில் பளையிலிருந்து 10.31 மணிக்கும், கொடிகாமத்திலிருந்து 10.48 மணிக்கும், சாவகச்சேரியிலிருந்து 11 மணிக்கும் புறப்பட்டு 11.20 மணிக்கும் யாழ்ப்பாணத்தை வந்தடையும்.

பிற்பகல் 2 மணிக்கு மறுபடியும் காங்கேசன்துறையிலிருந்து புறப்படும் இந்த ரயில், யாழ்ப்பாணத்திலிருந்து 2.39 மணிக்கும், சாவகச்சேரியிலிருந்து 2.59 மணிக்கும், கொடிகாமத்திலிருந்து 3.11 மணிக்கும் புறப்பட்டு, பளையை 3.38 மணிக்கும், கிளிநொச்சியை 3.56 மணிக்கும் வந்தடைந்து, முறிகண்டியை 4.10 மணிக்கு வந்தடையும்.

மீண்டும் முறிகண்டியிலிருந்து 4.40 மணிக்கும் புறப்படும் இந்த ரயில் அறிவியல்நகரை 4.46 மணிக்கும் வந்தடைந்து, கிளிநொச்சியிலிருந்து 5 மணிக்கு புறப்பட்டு, பரந்தனிலிருந்து 5.06 மணிக்கும், பளையிலிருந்து 5.30 மணிக்கும் புறப்பட்டு 6.44 மணிக்கும் யாழ்ப்பாணம் வந்தடைந்து 7.20 மணிக்கும் காங்கேசனை அடையும்.

இடையில், பரந்தனிலிருந்து 5.04 மணிக்கும், ஆனையிறவிலிருந்து 5.14 மணிக்கும் ரயில் புறப்படும்.






## குட்டிக் கதை ஒன்று படித்துப் பாருங்கள்

# விலங்குகள் பேசுவது புரிந்தால்



முன்னொரு காலத்தில் ஒரு நாட்டை அரசன் ஒருவன் ஆண்டு வந்தான். ஒருசமயம், காட்டு வழியாகச் சென்றான் அவன். அங்கே புலியிடம் சிக்கிக் கொண்டிருந்த துறவி ஒருவரைக் காப்பாற்றினான்.

மகிழ்ந்த துறவி, பறவைகள், விலங்குகள் என்ன பேசினாலும் இன்றுமுதல் உனக்குக் கேட்கும், இப்படிப்பட்ட ஆற்றல் உனக்குக் கிடைத்திருக்கிறது என்ற உண்மையை யாரிடமும் சொல்லக் கூடாது. அப்படிச் சொன்னால் தலை வெடித்து நீ இறந்து விடுவாய். போய் வா, என்றான்.

துறவியை வணங்கிவிட்டு அரண்மனைக்குப் புறப்பட்டான் அவன். வழியில் இருந்த விலங்குகள் பறவைகள் பேசிக் கொள்வது அவனுக்குத் தெளிவாகக் கேட்டது. தற்செயலாகக் கிடைத்த விந்தையான ஆற்றலை எண்ணி மகிழ்ந்தான் அவன்.

இரவு நேரம், அவனும் அரசியும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள், அப்பொழுது சிறிதளவு தேனும் ஒரு உருண்டை சோறும் தவறித் தரையில் விழுந்தன.

அங்கிருந்த எறும்பு ஒன்று, ஓடி வாருங்கள், கூட்டமாக ஓடி வாருங்கள், நமக்கு இனி உணவுப் பஞ்சமே இல்லை. அரண்மனை மதுக் குடம் உடைந்து தேன் வெள்ளமாகப் பாய்கிறது. பெருஞ்சோற்று மலையே நமக்காகக் கிடக்கிறது, என்று உரத்த குரலில் தன் கூட்டத்தை அழைத்தது.

இதைக் கேட்ட அரசன், இரண்டு சொட்டு தேன், தேன் வெள்ளமா? ஒரு உருண்டை சோறு பெருஞ்சோற்று மலையா? இந்த எறும்பிற்கு அறிவே இல்லையா? இப்படியா வருணிப்பது? என்று நினைத்தான், அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை.

தன்னை மறந்து கலகலவென்று சிரித்தான் அவன்.

அருகிலிருந்த அரசி, ஏன் சிரிக்கிறீர்கள்? என்று கேட்டாள்.

ஒன்றும் இல்லை, என்று மழுப்பினான் அவன்.

சாப்பிட்டு முடித்த அரசன் பட்டு மெத்தையில் படுத்தான். அரசி வெற்றிலை பாக்கு மடித்துத் தந்து கொண்டிருந்தாள். அறையில் இனிய மணம் பரவியது.

அங்கிருந்த ஆண் ஈ ஒன்று, பெண் ஈயை அழைத்து, எவ்வளவு இனிய சூழல் வா! நாம் இருவரும் அரசனின் முதுகில் இருந்து ஓடியாடி விளையாடுவோம். மகிழ்ச்சியா இருப்போம். இதைப் போன்ற நல்வாய்ப்பு யாருக்குக் கிடைக்கும்? என்றது.

என் முதுகு இந்த ஈக்களுக்கு மெத்தையா? என்று நினைத்தான் அரசன். அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை. மீண்டும் கலகலவென்று சிரித்தான்.

ஏன் சிரிக்கிறீர்கள், என்று கேட்டாள் அரசி.

ஒன்றும் இல்லை, என்று வழக்கம் போல மழுப்பினான் அவன்.

உண்மையைச் சொல்லுங்கள். என்னிடம் எதையோ மறைக்கிறீர்கள்? நீங்கள் சொல்லாவிட்டால் நான் இனி மேல் உங்களுடன் பேச மாட்டேன். என் மீது உயிரையே வைத்திருப்பதாக நீங்கள் சொன்னதெல்லாம் நடிப்பு, என்று கோபத்துடன் சொன்னாள் அவள்.

என் உயிருக்கும் மேலாக நான் உன்னிடம் அன்பு வைத்திருக்கிறேன். நான் சிரித்ததற்கான காரணம் மட்டும் கேட்காதே என்றான் அவன்.

நீங்கள் சொல்லித்தான் ஆக வேண்டும், என்று வற்புறுத்தினாள் அவள்.

உண்மையைச் சொன்னால் என் உயிர் போய்விடும், என்றான் அவன்.

அதெல்லாம் எனக்குத் தெரியாது. நீங்கள் சிரித்ததற்கான காரணம் எனக்குத் தெரிய வேண்டும், என்று அடம்பிடித்தாள் அவள்.

என்ன செய்தாலும் தன் மனைவியைச் சமாதானப்படுத்த முடியாது என்று உணர்ந்தான் அவன்.

என் உயிரைவிட உனக்கு நான் சிரித்ததற்கான காரணம் தெரிய வேண்டும். நாளை மாலையில் உனக்கு அந்த உண்மையைச் சொல்கிறேன். அப்படியே என் பிண ஊர்வலத்துக்கும் ஏற்பாடு செய்து வை. என்று வருத்தத்துடன் சொன்னான் அவன்.

பொழுது விடிந்தது. வழக்கம் போல அரண்மனைத் தோட்டத்தில் உலாவ வந்தான் அவன். மாலையில் இறக்கப் போகிறோம் என்ற எண்ணத்தில் சோகமாக இருந்தான். அரண்மனை முழுவதையும் அரசன் இறக்கப் போகும் செய்தி பரவி இருந்தது.

உலாவிக் கொண்டிருந்த அவன் பின்னால் வளர்ப்பு நாய் சோகமாக வந்து கொண்டிருந்தது.

சிறிது தூரத்தில் அரண்மனைச் சேவல் பெட்டைக் கோழிகள் சூழ ஆரவாரமாக உலாவிக் கொண்டிருந்தது.

இதைப் பார்த்த நாயால் கோபத்தை அடக்க முடியவில்லை. ஏ! சேவலே! உனக்குச் சிறிது கூட நன்றி கிடையாதா? நமக்கு இவ்வளவு காலம் உணவு அளித்துக் காப்பாற்றியவர் இந்த அரசர். இன்று மாலை இவர் இறக்கப் போகிறார். எல்லோரும் சோகமாக இருக்கின்றனர். இந்தச் சூழலில் நீ மகிழ்ச்சியாக இருக்கிறாயே? இது நியாயமா? என்று கேட்டது.

அதற்குச் சேவல், நம் அரசர் பெரிய முட்டாள். அவருக்கு இருப்பது ஒரே ஒரு மனைவி. அவளுக்காக உயிரைவிடத் துணிந்துள்ளார். எனக்கு எத்தனை மனைவிகள் இருக்கிறார்கள் நீயே பார். என் பேச்சைக் கேட்டுத்தான் அவர்கள் நடக்க வேண்டும். இல்லாவிட்டால் அவர்களுக்குத் தண்டனை தருவேன். மனைவிக்காக இந்த அருமையான உயிரை நான் இழக்க மாட்டேன், என்று பதில் சொன்னது.

இந்தச் சிக்கலிலிருந்து அரசர் உயிர் பிழைக்க வழி இருக்கிறதா? என்று கேட்டது நாய்.

அரசர் மட்டும் அரசியிடம் உன்னைச் சவுக்கால் நூறு அடி அடிப்பேன். அதன் பிறகுதான் உண்மையைச் சொல்வேன் என்று சொல்லட்டும். எல்லாம் நல்லபடியாக நடக்கும், என்றது சேவல்.

நாயும் சேவலும் பேசிக் கொண்டிருந்ததை ஒன்று விடாமல் கேட்டான் அரசன். அரண்மனை திரும்பினான் அவன்.

மாலை நேரம் வந்தது. அவன் அருகே வந்த அரசி, இப்பொழுது உண்மையைச் சொல்கிறீர்களா? என்று கேட்டாள்.

நீ முதலில் சவுக்கால் நூறு அடி பெற வேண்டும். அதன்பிறகு நான் உண்மையைச் சொல்லிவிட்டு இறந்து விடுவேன், என்றான் அரசன்.

நான் சவுக்கடி பெற்றுக் கொள்கிறேன். எப்படியும் உண்மை தெரிந்தாக வேண்டும், என்றாள் அவள்.

அறைக்குள் அவளை அழைத்துச் சென்றான் அரசன். கையில் சவுக்கை எடுத்த அவன் அவளை ஓங்கி அடித்தான்.

பத்து அடியைக் கூட அவளால் தாங்க முடியவில்லை. மென்மையான அவளுடைய உடலிலிருந்து குருதி கசியத் தொடங்கியது. ஐயோ! போதும் அடிப்பதை நிறுத்துங்கள். உங்கள் உண்மையும் வேண்டாம். சவுக்கடியும் வேண்டாம், என்று அலறினாள் அவள்.

சவுக்கால் அடிப்பதை நிறுத்தினான் அவன்.

அதன்பிறகு இருவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

# திருக்குறள் பற்றிய சில தகவல்கள்

திருக்குறளில் தமிழ் என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை
திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு - 1812
திருக்குறளின் முதல் பெயர் - முப்பால்
திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் - 133
திருக்குறள் அறத்துப்பாலில் உள்ள மொத்த குறட்பாக்கள் - 380
திருக்குறள் பொருட்பாலில் உள்ள மொத்த குறட்பாக்கள் - 700
திருக்குறள் காமத்துப்பாலில் உள்ள மொத்த குறட்பாக்கள் - 250
திருக்குறளில் உள்ள மொத்த குறட்பாக்கள் -1330
திருக்குறள், அகரத்தில் தொடங்கி னகரத்தில் முடிகிறது.
ஒவ்வொரு குறளும் இரண்டு அடிகளால், ஏழு சீர் களைக் கொண்டது.
திருக்குறளில் உள்ள சொற்கள் - 14,000
திருக்குறளில் உள்ள மொத்த எழுத்துக்கள் - 42,194
திருக்குறளில், தமிழ் எழுத்துக்கள் 247 - இல், 37 எழுத்துக்கள் மட்டும் இடம் பெறவில்லை.
திருக்குறளில் இடம்பெறும் இருமலர்கள் - அனிச்சம், குவளை.
திருக்குறளில் இடம்பெறும் ஒரே பழம் - நெருஞ்சிப்பழம்.
திருக்குறளில் இடம்பெறும் ஒரே விதை - குன்றிமணி.
திருக்குறளில் பயன்படுத்தப்படாத ஒரே உயிரெழுத்து - ஔ.
திருக்குறளில் இருமுறை வரும் ஒரே அதிகாரம் - குறிப்பறிதல்.
திருக்குறளில் இடம் பெற்ற இரண்டு மரங்கள் - பனை, மூங்கில்.
திருக்குறளில் அதிகம் பயன்படுத்தப்பட்ட (1705) ஓரெழுத்து - னி.
திருக்குறளில், ஒரு சொல், அதிக அளவில், அதே குறளில் வருவது பற்று - ஆறு முறை.
திருக்குறளில் ஒரு முறை மட்டும் பயன்படுத்தப்பட்ட இரு எழுத்துக்கள் - ளீ,ஙு.
திருக்குறளில் இடம்பெறாத இரு சொற்கள் - தமிழ், கடவுள் ( அகர முதல என தொடங்கும் முதல் குறள், கடவுள் வாழ்த்து அதிகாரத்தில் உள்ளது; இதில் ஆதி பகவன் - என்பது கடவுளைக் குறிக்கிறது).
திருக்குறள் மூலத்தை முதன் முதலில் அச்சிட்டவர் - தஞ்சை ஞானப்பிரகாசர்.
திருக்குறளுக்கு முதன் முதலில் உரை எழுதியவர் - மணக்குடவர்.
திருக்குறளை முதன் முதலில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர் - ஜி.யு.போப்.
திருக்குறள் உரையாசிரியர்களுள் 10ஆவது உரையாசிரியர் - பரிமேலழகர்.
திருக்குறளில் இடம்பெறாத ஒரே எண் - ஒன்பது.
திருக்குறளில் கோடி என்ற சொல் ஏழு இடங்களில் இடம் பெற்றுள்ளது.
எழுபது கோடி என்ற சொல் ஒரே ஒரு குறளில் இடம் பெற்றுள்ளது.
ஏழு என்ற சொல் எட்டுக் குறட்பாக்களில் எடுத்தாளப்பட்டுள்ளது.
திருக்குறள் இதுவரை 107 மொழிகளில் வெளிவந்துள்ளது.
திருக்குறளை ஆங்கிலத்தில் 40 பேர் மொழி பெயர்த்துள்ளனர்.
திருக்குறள், நரிக்குறவர் பேசும் வக்போலி மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

Page I English for all Sunday the 10th of July 2022

We welcome students' articles in word for publication

-Editor-

kalaikkathiredu@gmail.com

**Read the short passage and answer the questions**

## The Sick Lion



A Lion had come to the end of his days and lay sick unto death at the mouth of his cave, gasping for breath. The animals, his subjects, come round him and drew nearer as he grew more and more helpless, When they saw him on the point of death they thought to themselves: "Now is the time to pay off old grudges." So the Boar came up and drove at him with his tusksthen a Bullgored him with his horns, still, the Lion lay helpless before them so the Ass, feeling quite safe from danger, came up, and turning his tail to the Lion kicked up his heels into his face. This is a double death." growled the Lion

1. The lion was about to
   (1) jump (2) eat (3) die (4) run

2. The animals were
   (1) helping (2) hoppy (4) helpless (4) sod

3. The meaning of the word gosping" is
   (1) To look for gas (2) Breathing with open mouth
   (3) Eating gas (4) To drink water

4. The boar drove at the lion with his
   (1) Legs (2) Tail (3) tusks (4) body

5. Why did the animals hurt the lion more?

..........................................................................................................................

**Complete these sentences with one of the following verbs in the correct form**

(carry, cause, do, make, repair, send, spend, wake, up

1. The situation is serious. Something must ..................... before it's too late.
2. I have not received the letter. It might ..................... to the wrong address.
3. A decision will not ..................... until the next meeting.
4. I told the hotel receptionist that I wanted to ..................... at 8 a.m. the next morning.
5. Do you think that less money should ..................... on ornaments.
6. This road is in very bad condition. It should ..................... a long time ago.
7. The injured man couldn't walk and had to .....................
8. It is not certain how the fire started but it might ..................... by an electrical fault.

Answers:
1. be done., 2. have been sent, 3. be made., 4. be woken up., 5. be spent, 6. have been repaired., 7. be carried., 8. have been caused.

*Read the text and decide if the sentences are TRUE or FALSE Lee el texto y decide si las oraciones son VERDADERAS O FALSAS*

## Kate and Bob's big adventure



Kate and her cousin, Bob, are going on holiday to an adventure camp.

They love adventure sports. So when they arrive, they feel very excited because it's a really beautiful place where they can do lots of different sports. On Monday, they ride mountain bikes. "Wow, this is great!" says Bob. "You can ride very well" says Kate. On Tuesday, they go rock climbing "You can climb very fast Bob, but I can't!" says Kate. On Wednesday, they go rafting. Bob is a bit scared because he can't swim very well but Kate can. "Come on Bob, this is fantastic!" says Kate.

On Thursday they go surfing. Kate can do a lot of surfing tricks. "Look at me! I'm a great surfer, I love it!" says Kate. "Congratulations Kate, you can surf very well" says Bob. On Friday, they go parachuting. They jump and fall through the air. "I feel like I can fly", says Bob, but Kate doesn't answer, because she is a bit scared. Kate and Bob had an amazing week, but now they are ready to go home and rest for the rest of the weekend.

1. Kate and Bob love adventure sports. T/ F
2. In the adventure camp they can sing and dance. T/ F
3. Kate and Bob can ride bikes. T/ F
4. Kate can climb fast T/ F
5. Kate can swim very well. T/ F
6. Bob and Kate go surfing. T/ F
7. They go parachuting on Friday. T/ F
8. Kate says "I feel I can fly". T/ F
9. Kate and Bob had a fantastic time in the adventure camp. T/ F
10. Kate and Bob go to school after the adventure camp. T/ F

**Imagination is more important than intelligence - Albert Einstein**



# The Importance of Facials and Skin Care

A good skin care routine is only as good as the products you use. While good quality products can help your skin look better now as well as in the future, poor quality products can be ineffective and even cause harm. In this blog, the dermatologists at Skin Center of South Miami explain more about the importance of quality skin care and facial products:

Why is good skin care important?

Good skin care is important for the following reasons:

It helps your skin stay in good condition: You're shedding skin cells throughout the day, so it's important to keep your skin glowing and in good condition. An effective routine can help prevent acne, treat wrinkles, and help keep your skin looking its best.

Your skin will look more youthful: As you age, your skin's cells turn over more slowly, make it look duller and less radiant. Using a quality skin care line can help remove dead skin cells so your body will replace them with newer, more youthful cells.

Prevention is easier than correction: Preventing skin problems is easier -– and less costly – than trying to fix them in the future.

Your self-confidence will get a boost: When your skin looks better, you'll feel better about yourself and have more self-confidence.

What are some good skin care methods?

The following components can create a good, effective skin care routine:

Cleanser: Wash your face gently with a product designed for your face. If you have dry skin, you'll want to choose a cleanser that doesn't have alcohol, and if you have oily skin, look for an oil-free cleanser. Afterward, rinse with warm water.

Toner: Toner is used after washing your face, and it helps smooth and calm skin while restoring nutrients.

Moisturizer: Moisturizers should be used every time you wash your face, even if you have oily skin. If you have this type of skin, choose an oil-free or gel product.

Sunscreen: Even if your moisturizer has a sunscreen, it can still help to use a separate sunscreen every day, even if it's cloudy. Choose one that provides broad-spectrum protection and has an SPF of at least 30.

Exfoliator: Exfoliators are optional and can be used after a cleanser but before a moisturizer. They should only be used a maximum of once or twice a week.

Serum: A serum can help address specific issues, such as redness.

What benefits do quality skin care products provide?

The following are some of the benefits of quality skin care products:

Quality ingredients: Similar to the benefits that healthy food provides for your body, quality skincare ingredients can improve your skin.

Protection from environmental damage: such as pollution

Help fighting the effects of aging: such as wrinkles and sunspots

Results for the money: Even if quality products cost more in some cases, they're worth the money. If you use ineffective products, you're wasting money.

Exceeding standards: Quality skin care products are more refined, with fewer bacteria and impurities.

Why should you avoid poor quality skin care products?

Poor quality skin care products are more likely to cause the following negative effects:

Ineffective results

Infections

Allergic reactions such as rashes

Worsening problems by clogging pores, causing breakouts, etc.

To learn more about the importance of a good quality skin care line as well as what products would benefit you, make an appointment today for a consultation with Skin Center of South Miami. Our state-of-the-art dermatology center is home to top skin doctors, and we're dedicated to providing personalized, effective care.

# The importance of manicure and pedicure



One of the many services offered by Vogue Lashes and Spa is a professional manicure and pedicure.

Let's take a closer look at these procedures and learn how important they are for everyone.

Having neat manicure today is a part of the perfect female or male image, because people you meet often pay attention to your hands and nails' condition and judge the overall accuracy of the person according to it. Therefore, if you want to create a pleasant impression, do not forget about getting regular manicure procedures.

When doing manicure our professional technicians will put in order even the rough problematic hands. For hands with a particular type of skin, in our salon there is a great option offered - a European manicure (using a nail file machine).

The main method of manicure, which is widely popular, is a classic manicure, when nail scissors and cuticle nippers are used to remove cuticles and hangnails. Along with this, this method is known for the use of soaking baths for hands.

For a special softness and care an exfoliating scrub, deep moisturizing mask or paraffin mask could be included in the procedure.

Many people mistakenly believe that a pedicure done in a salon is just an aesthetic procedure that is necessary only in order to give the legs a beautiful and well-groomed appearance. In some ways, this is true, because few people like the look of rough and untidy feet. Soft-skin legs with painted toenails look much more attractive.

However, the main task of a professional pedicure is not at all in this. First of all, pedicure is an essential part of body care, because it helps to prevent various diseases of the feet. Thanks to this simple procedure, dead cells of the feet's skin get removed, ingrown nails and calluses get treated, which prevents fungal diseases, as well as in general the legs acquire a healthy appearance. With the help of a regular pedicure, a normal healthy condition of the skin of the soles, toenails and toes is maintained. Constant attention to the feet and toenails will help in time to identify the presence of any deviations, whether flat feet or nail deformation. A leg and foot massage included in the pedicure increases the overall tone of the body. There also could be added a special deeply moisturizing mask with hot towels wrap to treat dry and cracked skin, and for even better effect don't forget about adding a paraffin mask which especially feels warm and cozy in winter time. You can also add hot stones massage which increases blood circulation and leaves a pleasant feeling.

That is why nowadays everyone who takes care of himself or herself and his or her health should not forget about such an important, useful and pleasant procedure as a pedicure.

Manicure and pedicure from our salon will give beauty and health to your hands and feet!

# இலக்கிய நயம்

# சங்க காலத்து காதல்



யாழ் மகள் சைந்தவி

கலை இலக்கியங்கள் மரபைப் பின்பற்றியதால் தான் தமிழ் மொழி இன்னும் நிலைத்திருக்கின்றது. குறிப்பாக சங்க இலக்கிய அகத்திணைப் பாடல்கள் அனைத்தும் மரபின் அடிப்படையிலேயே எழுதப்பட்டிருக்கின்றன. இப்பாடல்கள் பழைமையாக இருந்தாலும் இன்றைய நம் வாழ்க்கைக்கும் வழிகாட்டிக் கொண்டிருக்கின்றன. அப்படி வழிகாட்டிக்கொண்டிருக்கும் இலக்கியங்களுள் ஒன்றுதான் 'குறுந்தொகை'.

குறுகிய அடிகளை உடையதால் குறுந்தொகை எனப்பெயர் பெற்றது. இக்குறுந்தொகை சங்க காலத்தில் வாழ்ந்த மக்களின் காதல் வாழ்வையும், இல்லற வாழ்வையும் இனிமையாக எடுத்துரைக்கின்றது.

ஆண், பெண் இருவரையும் தலைவன், தலைவி என்ற பொதுப்பெயரால் குறிப்பிடுவது சங்க இலக்கிய மரபு. அந்த வகையில் தலைவி ஒருத்தி தலைவன் மீது மாறாத அன்பு கொண்டிருக்கிறாள். தலைவன் 'களவு வாழ்க்கை'யில் தலைவியை ரகசியமாக வந்து சந்திக்கிறான். இந்தச் சந்திப்பு பல நாள்கள் தொடர்கின்றன. தோழி இதனைப் பார்த்து விடுகின்றாள்.

அப்பொழுது தலைவனிடம், 'ஏன் இவ்வாறு நடந்து கொள்கிறாய், தலைவியை உடனே திருமணம் செய்து கொள்ள வேண்டும்' என்று எச்சரிக்கிறாள்.

தலைவி இதனை அறிகிறாள். எச்சரித்த தோழியிடம் தலைவனைப் பற்றி கொஞ்சம் உச்சரிக்கிறாள்.

அப்போது, 'நான் என் தலைவனோடு கொண்டிருக்கின்ற நட்பு எப்படிப்பட்டது தெரியுமா? இதோ! மலையும் மலைசார்ந்திருக்கின்ற குறிஞ்சி நிலம். இதில் குறிஞ்சிப் பூக்கள் பூத்துக்குலுங்குகின்றன. அந்தப்பூக்களில் தேன் அருந்திய வண்டுகள் உயர்ந்து வளர்ந்திருக்கின்ற சந்தனமரங்களில் தேன் கூடுகள் கட்டியிருக்கின்றன. அப்படிப்பட்ட உயர்ந்த நாட்டின் தலைவன். அந்த தலைவனோடு தான் நான் நட்புக்கொண்டிருக்கின்றேன். அந்த நட்பு இந்த நிலத்தைவிடப்பெரியது, வானைவிட உயர்ந்தது, கடலைவிட ஆழமானது' என்று பெருமிதத்தோடு கூறுகிறாள்.

இதனைத்தான்...

**நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆர்அள வின்றே - சாரல்**
**கருங்கோல் குறிஞ்சிப் பூக்கொண்டு**
**பெருந்தேன் இளைக்கும் நாடனொடு நட்பே**
**என்கிறது குறுந்தொகைப்பாடல்.**

தோழி இதனைக் கேட்டதும் சிலிர்த்துப் போகிறாள்.

ஆம்! உண்மையான அன்பிற்கு ஏது எல்லை. எல்லை கடந்த அன்பின் ஆழத்தில் தானே காதல் இன்பமும் இருக்கின்றது. அதுமட்டுமல்ல இந்தப்பாடல் தலைவனின் அன்பின் ஆழத்தையும் தலைவன் மீது வைத்திருக்கும் நம்பிக்கையையும் தெரியப்படுத்துகின்றது. நல்ல நட்புக்கு பலரும் எடுத்துக்காட்டும் இனிய பாடல் இது.

இரு நெஞ்சங்களின் இனிய கலப்பு

அன்பு வயப்பட்ட காதலர்கள் இருவரும் இதயத்தால் ஒன்றுபடுகின்றனர். இந்த இதயப்பிணைப்பு எப்படி இருக்கிறது தெரியுமா? 'செம்புலப் பெயல் நீர்போல' இருக்கிறதாம்.

அது என்ன 'செம்புலப்பெயல் நீர்' என்கிறீர்களா?

இதோ! அந்த இனிய பாடலின் காட்சி.

வானத்திலிருந்து பொழிகிறது மழைத்துளி. அது கரிசல் நிலத்தில் விழுந்தால் கருமை நிறமாக மாறும். அதே மழைத்துளி செம்மண் நிலத்தில் விழுந்தால் சிவப்பாக மாறும். இப்படி சேருகின்ற இடத்தைப் பொறுத்து அதன் இயல்பை அடைவதைப் போல், காதலர்கள் இருவரும் ஒன்று சேர்ந்தனராம்.

ஆம்! இதுவரை அவர்கள் யார் யாராகவோ இருந்தார்கள். எந்த வகையிலும் உறவினர்கள் அல்லர். ஆனால் காதலால் அவர்கள் இருவரும் ஒன்று சேர்ந்தனராம். இதைத்தான் 'செம்புலப்பெயல் நீர் போல' என்ற உவமையால் குறிப்பிடுகின்றார் புலவர்.

இந்த இதயங்களின் இணைப்பைத்தான்,

**'யாயும் ஞாயும் யாராகி யரோ**
**எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்**
**யானும் நீயும் எவ்வழி அறிதும்**
**செம்புலப்பெயல் நீர் போல**
**அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே...'**

என்கிறார்.

காதலர்களின் இனிய இணைப்பிற்கு இதைவிட வேறு என்ன உவமை சொல்லமுடியும். இந்த உவமைதான் இலக்கியச் சுவைப்பிற்கு இன்பத்தைத் தருகின்றது.

இன்பத்தில் ஆழ்ந்திருக்கும் இனிய வேளையில் கொஞ்சம் சோகமும் நிழலாடுகிறது. சோகத்திற்குக் காரணம் சுகமான இந்தப் பாடலை எழுதியவர் தன் பெயரை எழுத மறந்துவிட்டது தான். அதனால் புலவர் பாடிய உவமையாலேயே 'செம்புலப் பெயல் நீரார்' என்ற பெயரைத் தொகுத்தவர் சூட்டிவிட்டார்.

இவரைப் போலவே அன்பின் ஆழத்தை வெளிப்படுத்திய மற்றொரு புலவர். உவமையால் இவருக்கு வந்த பெயர் 'ஓரேர் உழவனார்' என்பதாகும்.

இந்தப் பெயருக்குக் காரணமான கவிதைக் காட்சியைப் பாருங்கள்...

வினையே ஆடவர்க்கு உயிராகப் போற்றுபவன் தலைவன். 'வினை' என்றால் 'செய்யும் தொழில்'. அந்தத் தொழில் தான் ஆடவர்க்கு உயிர். அதைப் போல் வீட்டிலிருக்கின்ற பெண்ணுக்கு ஆடவர் தான் உயிர்.

இந்த உயர்ந்த வாழ்க்கையைத் தான் குறுந்தொகைப் பாடல் ஒன்று பதிவு செய்திருக்கின்றது.

இங்கே தலைவன் வினை முடித்து வருகிறான். பார்க்க வருவது தலைவியை அல்லவா! அதுவும் பிரிவுக்குப் பிறகு வரும் சந்திப்பு அல்லவா!. குதிரை பூட்டிய தேரை வேகமாகச் செலுத்துகிறான். இந்த வேகம் தான் 'ஓரேர் உழவனைப் போல்' இருக்கிறதாம்.

சுருங்கச்சொல்லி விளங்க வைப்பதற்குத்தானே புலவர்கள் உவமையைப் பயன்படுத்துகின்றார்கள். அது போலத்தான் இந்த உவமையும்.

# எண்ணம்

ஒவ்வொரு நாள் காலையிலும்
கண் விழிக்கும் போதும்
தோன்றும் எண்ணம் ஒன்றே ஒன்றுதான்
இந்த 'மொபைல் டேட்டா'வை
இன்று இயக்கவே கூடாது
செய்தி நீரோடைகளை காணக் கூடாது
உரையாடல் பெட்டிகளை திறக்கக் கூடாது
யார் கண்ணிலும் படக் கூடாது
இந்த 'சிம்'மைக்கூட உருவி எறிந்து விட வேண்டும்
இருக்கிறேனா செத்தேனா என்றுகூட
ஒருவருக்கும் தெரிய வேண்டாம்
ஒவ்வொரு நாளும்
இதைத்தான் நினைக்கிறேன்
அப்புறம் எங்கே போவதென்று தெரியாமல்
இங்கேயே வந்து விடுகிறேன்
எவ்வளவு தூரம்
மனம் கசந்து நடந்தாலும்
நம் வீடுகளுக்கே திரும்புவது போல
என் நெஞ்சில் ஒரு துளி வெறுப்பில்லை
நான் இங்கிருப்பது
உனக்கு ஒரு பொருட்டே அல்ல என
என்னை உணரச் செய்யும்
இன்னுமொரு வறண்ட பொழுதைத் துவங்க
அவ்வளவு சோர்வாக இருக்கிறது

மனுஷ்ய புத்திரன்

# கனவுக் கதிர்



## நீ திரும்பிவரக் காத்திருக்கும் தேனீர்ப் பொழுதுகள்

**நீ கடைசி முத்தத்தையும்**
**கைவிட்டுச்செல்லவிருக்கும்**
**காதலையும் கொண்டு**
**வந்திருந்தாய் அன்று**
**பலத்த மழை பெய்து ஓய்ந்திருந்த**
**மாலைப் பொழுதுதான் அது**
**வானத்தில் மழைக்குருவிகளின்**
**சத்தம் மீண்டும் மழையை**
**வரவேற்க காத்திருந்தது**
**நான் ஏதும் பேசாது உனக்கு**
**தேனீர் பரிமாறினேன்**
**நீ வழிந்தோடும் கண்ணீரைத்**
**துடைத்துக் கொண்டு**
**என்னை முத்தமிட்டுக்கொண்டிருந்தாய்**
**எனது மனம் முழுதும் நிறைந்த**
**வார்தைகள் கிடந்தும் நான்**
**மௌனமாகவே இருந்தேன்**
**அன்றுதான் நான் உன்னை**
**அழவிட்டு வேடிக்கை பாரத்தேன்**
**ஏக்கத்தினுல்லும் தவிப்பினுல்லும்**
**அன்றுதான் தள்ளி விட்டேன்**
**என் மீதான பிரியத்தின் உச்சத்தை**
**நீ முத்தத்தினால் சொல்லிக்கொண்டிருந்ததை**
**நான் வேண்டா வெறுப்பாய் எற்றுக்கொண்டேன்**
**என் நேசத்தை விட்டுச்செல்லவிருக்கும்**
**உன்னை புரிந்து கொண்ட நான்**
**ஆற்றாமையை வலியோடு தாங்கிக்கொண்டேன்**
**எதிர்காலத்தை நீயின்றி கடப்பதை எண்ணி**
**துயரடைந்தேன்**
**நீ நன்றாக வாழ்ந்து கொள்கிறாய்**
**என் கவிதைகளிலும் சரி உனது**
**வாழ்கையிலும் சரி**
**என்னை நினைவுகளாக**
**மட்டும் வைத்துக் கொண்டு**
**நான் பரிமாறும் தேனீரை**
**அன்றுதான் அருந்தாமல் விட்டுச் சென்றாய்**
**இப்போது மழை நின்ற பொழுதுகளின்**
**பின் நான் தேனீர் அருந்துவதையும் நிறுத்தி விட்டேன்**
**எப்போதும் என் மனம் சொல்லிக்கொள்ளும்**
**இன்னுமொரு தேனீர் பொழுதுகளில்தான்**
**நாம் சந்தித்துக் கொள்வொமென்று**
**இருந்தும்**
**தேனீர் பருகி இறந்து செல்லும் நிமிடங்களில்**
**நாம் எத்தனை வார்தைகளை பேசிவிடப்போகிறோம்**

- நேதா மோகன் -





# கல்விக்கதிர்

- அகரன் -

## நீங்கள் அறிந்திடாத இலங்கையின் அதிசயம் ஒன்று



புஸ்ஸல்லாவ பிரதேசத்திற்கு உட்பட்ட நுவரெலியா, கண்டி பிரதான பாதையில் இருந்து சுமார் 300 மீற்றர் தூரத்தில் வகுகவ்பிட்டிய பிரதேசத்தில் ஊற்று மாரியம்மன் என்ற ஒரு சிறிய கோவில் காணப்படுகின்றது.

இந்த ஆலயம் இருக்கும் இடம் சுமார் 05 ஏக்கர் கொண்ட காட்டு பாதுகாக்கப்பட்ட பிரதேசமாகும். இந்த இடத்தில். விசித்திரமான ஊற்று நீர் ஒன்று காணப்படுகின்றது.

ஒரு பானையில் நீரை நன்கு கொதிக்க வைத்தால் அந்த நீர் எவ்வாறு கொதித்து பொங்கி எழுமோ அந்த அளவிற்கு இந்த நீர் ஓர் குறிப்பிட்ட இடத்தில் இருந்து பொங்கி வருகின்றது.

இந் நீர் மிகவும் குளிர்மையான செறிவு கூடியதாக விரும்பி பருகுவதற்கு சுவையானதாகவும் மருத்துவ குணமிக்கதாகவும் காணப்படுகின்றது.

அத்துடன் இந்த இடத்தில் காக்கா பொன்னு என்று சொல்லக் கூடிய கனிய வளமும் காணப்படுவதால் நீருடன் தங்க துகள்கள் போன்று காக்கா பொன்னும் நீரோடு பொங்கி எழுகின்றது.

பார்ப்பதற்கு மிகவும் புதுமையாகவும் மனதிற்கு ஆறுதலாகவும் கோயிலும் காணப்படவதினால் தெய்வீக தனமாகவும்வியக்கத்தக்கவகையிலும்காணப்படுகின்றது.



எவ்வளவுதான் வெயில் காலம் வந்தாலும் இந்த நீர் ஊற்று வற்றுவதில்லை. சிறிய ஊற்றாக வெளி வந்து ஆறாக ஓடுகின்றது இந்த நீரை மக்கள் குடிப்பதற்கும் விவசாயம் செய்வதற்கும் பாவித்து வருகின்றனர்.

பொதுவாக புஸ்ஸல்லாவ, இறம்பொடை, நுவரெலியா போன்ற இடங்கள் இராமாயணத்திற்கு பெயர் போன இடங்கள்.

நுவரெலியாவிலேயே சீதை அம்மன் கோவில் காணப்படுகின்றது. அசோகவனமும் காணப்படுகின்றது. அரம்பத்தில் புஸ்ஸல்லாவ பிரதேசத்தில் இருந்தே அசோகவனம் ஆரம்பித்து உள்ளது. காலப்போக்கில் தேயிலை உற்பத்திக்காக காடுகள் அழிக்கப்பட்டு அசோக வனம் வேறாக பிரிக்கப்பட்டு விட்டது புஸ்ஸல்லாவ வேறாக்கப்பட்டு விட்டது.

இராமாயணத்தில் இராவணன் சீதை அம்மனை இந்தியாவில் இருந்து இராமேஸ்வரம், மன்னார், மாத்தளைசு, புஸ்ஸல்லாவ வழியாக தனது புஸ்பக விமானத்தில் நுவரெலியாவிற்கு அழைத்து செல்லும் வழியில் சீதை அம்மன் இராமனை நினைத்து விட்ட கண்ணீரின் ஒரு துளி இப்பிரதேசத்தில் விழுந்துள்ளது.

இந்த கண்ணீர் விழுந்த இடம் தற்போதும் சீதை அம்மனின் கண்ணீராக பொங்கி நீராக வருகின்றது என்ற வரலாறும் உள்ளது.

அது உண்மையாக இருக்கலாம் காரணம் பல ஆண்டுகளுக்கு முன்னர் அருகில் உள்ள சோகம தோட்டத்தில் காணப்பட்ட அம்மன் சிலை ஒன்று களவாடப்பட்டு வேறு இடத்திற்கு இவ்வழியாக கொண்டு செல்லும் போது. இந்த இடத்தில் அந்த சிலை இயற்கையாகவே பூமிக்கு அடியில் சென்று விட்டதாம். அன்று முதல் இந்த நீர் ஊற்று உருவாகி சிலையின் நிறத்தில் தங்க துகள்களுடன் பொங்கி வருவதாக கூறுகின்றனர். தற்போதும் இந்நிலை காணப்படுகின்றது.

இராமயத்துடன் தொடர்பு கொண்டதால் என்னவோ குறித்த இடத்தில் அனுமானின் உருவம் ஒன்று இயற்கையாகவே மரம் ஒன்றில் உருவாகி உள்ளது. இதையும் மக்கள் வணங்கி வருகின்றனர். இந்த காட்டுப் பகுதியில் குரங்குகளும் வசித்து வருவதுடன் தனக்கு உணவு தேவை ஏற்படும் போது ஆலயத்திற்கு வந்து உணவை பெற்று செல்கின்றன. அசோகவனத்தை ஒத்த இயற்கை காட்டு வளமும் இங்கு காணப்படுவதுடன் அரசாங்கம் இதனை பாதுகாத்து வருகின்றது.

சோகம தோட்ட மக்கள் தற்போதும் தங்கள் ஆலயத்தில் திருவிழாக்கள் நடக்கும் சந்தர்ப்பத்தில் இந்த நீர் ஊற்றில் நீர் எடுத்து கரகம் பாலித்து திருவிழாக்களை நடாத்தி வருகின்றனர்.

இதனை தொடர்ந்து இந்த இடத்தில் அம்மனை வைத்து ஊற்று மாரியம்மன் என்ற பெயரில் ஆலயம் அமைத்து வணங்கி வருகின்றனர்.

இந்த ஆலயத்தை இப்பிரதேசத்தைச் சேர்ந்த ஆலய தர்மகர்த்தா கிருஸ்ணபிள்ளை வேலுராமன் அய்யா அவர்கள் மிகவும் அர்ப்பணிப்புடன் நடாத்தி பக்தர்களுக்கு சேவை செய்து வருகின்றார்.

இவரின் முயற்சியினாலேயே இந்த ஆலயம் உருவாகியுள்ளது. இவருக்கு இவரது மகள்மார்கள் மிகவும் உதவியாக இருக்கின்றார்கள்.


இந்த ஆலயத்திற்கு இன மத பேதம் இன்றி அனைத்து மக்களும் வந்து வணங்கி செல்கின்றனர்.

பக்தர்கள் தாங்கள் கேட்கும் அனைத்தையும் அம்மன் வழங்கி வருகின்றாள். பிள்ளைபேறு, செய் சூனியம் நினைத்த காரியங்கள் நிறைவேற்றல், திருமணம், தோசம் கழிதல், தீராத நோய் பிணி தீர்த்தல் நினைத்த காரியம் நிறைவேற்றல் இவை அனைத்தும் நிறைவேறி வருகின்றன.

தற்போது உலக சைவ திருச்சபையின் தலைவர் கலாநிதி அடியார் விபுலாநந்தா தலைவரின் ஏற்பாட்டில் ஊற்றுலிங்கேஸ்வரர் சிவலிங்கம் ஒன்றும் பிரதிஸ்டை செய்யப்பட்டுள்ளது. தனியாக இருந்து மக்களுக்கு அருள் பாலித்து வந்த ஊற்று மாரியம்மன் ஊற்றுலிங்கேஸ்வரருடன் இணைந்து அருள் பாலித்து வருகின்றாள். பக்தர்கள் ஊற்று நீரை எடுத்து சிவனுக்கு தாங்கலாகவே ஊற்றி வழிபட்டு வருகின்றனர். பிரதோஷ விரதம் மற்றும் பிதிர்க்கடன்களை இங்கு நிறைவேற்றி வருகின்றனர்.

## அம்மன்னீல் கோட்டை தெரியுமா?

இலங்கையில் ஐரோப்பியர்கள் ஆட்சியில் கட்டப்பட்ட பல கோட்டைகளில் இந்த அம்மன்னீல் கோட்டை முக்கியத்துவம் பெற்ற ஒன்றாக விளங்குகின்றது. அதற்கு பிரதான காரணம், கடலின் மத்தியில் அமைந்துள்ளதும் இக்கோட்டையின் அழகிய தோற்றமுமாகும். 17 ஆம் நூற்றாண்டின் காலப்பகுதியில் போர்த்துக்கேயர்களால் யாழ்ப்பாண மாவட்டத்தில் காரைநகர்த் தீவுக்கும்,வேலணை என்ற தீவுக்கும் இடையில் மத்தியக் கடலில் இக்கோட்டையானது கட்டப்பட்டுள்ளது. ஒடுங்கிய கடல் நிலப்பகுதியிலுள்ள சிறிய மணற்திட்டு ஒன்றில் அமைந்துள்ள இக்கோட்டையானது, ஊர்காவற்றுறை கடற்கோட்டை, அம்மன்னீல் கோட்டை போன்ற பெயர்களால் அழைக்கப்படுகின்றது.



யாழ்ப்பாணத்தில் ஐரோப்பியர்களின் ஆதிக்க சின்னமாக காணப்படும் இக்கோட்டையானது 17ஆம் நூற்றாண்டில் அமிநால் டெமன்சில் என்ற போர்த்துக்கேய தளபதியால் கட்டப்பட்டுள்ளது என்கிறது வரலாற்றுக் குறிப்புக்கள்.

பண்டைய காலம் தொட்டே இலங்கையின் வடக்குப் பகுதியில் பிரசித்தி பெற்ற துறைமுகமாக ஊர்காவற்றுறை திகழ்துள்ளது. கடல்வழிப் பயணம் செய்பவர்களுக்கு நுழைவுச்சீட்டு வழங்கும் இடமாகவும் கப்பல் போக்குவரத்தில் ஏற்படும் சிக்கல்களை சரி செய்யும் இடமாகவும் இக்கோட்டை பயன்பட்டுள்ளது. பின்னாட்களில் தொல்லியல் திணைக்களப் பொறுப்பில் இருந்த இக்கோட்டையானது பிரித்தானியர்களின் ஆட்சியில் ஆயுள்தண்டைக் கைதிகள் சிறைப்படுத்தப்பட்ட இடமாகவும் செயற்பட்டுள்ளது. பின்னாட்களில் சிறிது காலம் சுங்கப் பரிசோதனை நிலையமாகவும் இக்கோட்டை விளங்கியுள்ளது.

அம்மன்னீல் கோட்டையினுள் சிறைச்சாலை முறையில் அமைக்கப்பட்டுள்ளது.

எட்டுபக்க சுவர்களைக்கொண்டு பல்கோண வடிவில் கட்டப்பட்டுள்ள இக்கோட்டையின் பிரதான நுழைவாயிலானது தெற்கு திசையில் அமைந்துள்ளது. வடகிழக்குப் பக்கச் சுவரில் முக்கோண வடிவிலான ஒரு நீட்சி காணப்படுகிறது. மற்றும் இக்கோட்டையானது சிறைச்சாலையாக செயற்பட்ட தன் சான்றுகளும் இங்கு காணப்படுகின்றது. ஒல்லாந்தர் காலத்திலும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி வரை சில கட்டடங்கள் இருந்ததாகவும் பின்னாட்களில் அவைகள் இடிக்கப்பட்டதாகவும் சொல்லப்படுகின்றது.

இலங்கையில் பல்வேறு இடங்களில் காணப்படும் சுற்றுலாத் தளங்கள் போலவே, இந்த அம்மன்னீல் கோட்டையும் சுற்றுலாப் பயணிகளை ஈர்த்து வருகின்றது. இரவு நேரங்களிலும் இந்தக் கோட்டையானது பெருங்கடலில் ஏற்றப்பட்ட சிறுதீபம் போல பார்ப்பவர்களின் கண்கவர்ந்து வருகின்றது. சுற்றுலாப் பயணிகள் இக்கோட்டையினுள் செல்வதற்கு பாதுகாப்புப் படையினரிடம் முன்பாகவே அனுமதி பெறவேண்டும். இதனுள் சிறைச்சாலை போன்று அமைக்கப்பட்டுள்ள உணவு விடுதிகள் இங்கு செல்பவர்களுக்கு வித்தியாசமானதொரு அனுபவத்தை வழங்கும் என்பதில் ஐயமில்லை. சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வரும் இந்த அம்மன்னீல் கோட்டையைப் போன்றே இலங்கையின் மற்றைய வரலாற்று பொக்கிஷங்களும் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகும்.

காலைக்கதிர் வார இதழ் Kalaikkathir

# நேர்கான

## திகழ்விழி யூடியூப் சனலின் உரிமையாளரும், பரதநாட்டியக் கலைஞருமாகிய தக்ஷிகா தயாளன் உடனான நேர்காணல்.

**01) உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்?**

தனக்கான அங்கீகாரத்தை உருவாக்க போராடும் பெண்களில் ஒருத்தியே நான். எனது பெயர் தக்ஷிகா தயாளன். மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள அழகிய நகரமான கண்டியே என்னுடைய பிறப்பிடம். தற்போது திருகோணமலையில் வசித்து வருகிறேன். எதிலும் தனித்துவ தன்மையை எதிர்பார்க்கும் எனக்கு யூடியூப் ஒரு களமாக கிடைத்தது திகழ்விழி எனும் பெயரில் கடந்த ஒரு வருடமாக யூடியூப் சனலை நடாத்தி வருகிறேன்.

**02) உங்களது திகழ்விழி யூடியூப் சனலை ஆரம்பித்ததற்கான ஆர்வம் பற்றி?**

எனக்கான ஒரு மேடையை, எனக்கான ஒரு அங்கீகாரத்தை நானே உருவாக்க வேண்டும் என்பதே எனது குறிக்கோள். சிறுவயதிலிருந்தே அழகிய வரலாற்று சார்ந்த இடங்களுக்கு செல்வதும், அங்கு உள்ள வரலாறுகளை தெரிந்து கொள்வதும், தேடுவதும், ஆராய்ச்சி செய்வது மட்டுமல்லாது நான் கண்ட அழகிய காட்சிகளை என்னுடைய நண்பர்களுக்கும், குடும்பத்தாருக்கும் ரசனையுடன் பகிரந்து கொள்வதிலும் மிகுந்த ஆர்வம் இருந்தது அந்த ஆசையும் ஆர்வமுமே திகழ்விழியின் உருவாக்கத்திற்கான முக்கிய காரணம்.

**03) இதன் மூலமாக எவ்வாறான விடயங்களை கருத்திற் கொண்டு பதிவிட்டு வருகிறீர்கள்?**





“ பொறுமையும், உழைப்பும் இருந்தால் நிச்சயமாக வென்றிடலாம்.”

இலங்கை மிக அழகிய நாடு இது உலகம் அறிந்ததே ஆனாலும் கூட இலங்கையின் பல அழகான வரலாற்று சார்ந்த இடங்கள் இன்னும் நிறைய பேருக்கு தெரியாமல், வெளிவராமல் இருக்கிறன்றது. அந்த இடங்களை வெளிக்கொண்டு வருவதோடு சுற்றுலா பயணிகளுக்கும் உதவும் விதமாக தற்போதைய காணொலிகளை வெளியிட்டு வருகிறேன்.

**04) திகழ்விழிமூலமாக இலங்கையின் வரலாற்று இடங்களை பதிவிட்டு வரும் நீங்கள் அவ் இடம் சார்ந்த தகவல்களின் உண்மைத் தன்மையினை எவ்வாறான முறையில் பெற்றுக் கொள்கின்றீர்கள்?**

ஒவ்வொரு இடத்திற்கும் செல்லும் முன்பு வரலாற்றுக் குறிப்புக்கள், வரலாற்று ஆவணங்கள் போன்றவற்றிலும், அவ் இடத்தில் இருக்கும் முன்னோர்களிடமும், அப் பிரதேசத்தை சுற்றி இருப்பவர்களிடமும் கலந்துரையாடுவதன் மூலமாக தகவல்களை பெற்றுக் கொள்ள முடிகிறது.

**05) திகழ்விழியின்ஆரம்ப காலப் பயணம் தொடக்கம் இன்று வரை சமூகத்தின் மத்தியில் எவ்வாறான வரவேற்பை பெற்றுள்ளது?**

ஆரம்பத்திலிருந்தே மிகுந்த வரவேற்பு கிடைத்தது. வாழ்த்துக்கள் இன்னும் என்னை மெருகேற்றி கொள்ளும் வகையான ஊக்குவிப்புகளாக கிடைத்தது. இந்த வரவேற்பே இன்னும் பல காணொலிகளை உருவாக்க வழிவகுத்தது எனலாம்.

**06) ஒவ்வொரு இடங்களுக்குச் சென்றும் அவை பற்றிய தகவல்களை பதிவிட்டு வரும் வேளையில், எவ்வாறான சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது?**

தற்போது நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள பெற்றோல் தட்டுப்பாடு பெரிய சவாலாக இருக்கிறது. ஆரம்பக் காலத்தில் கையடக்க தொலைபேசி மட்டுமே மூலாதாரமாக இருந்தமையினால் அதில் காணொலி பதிவு செய்வதும், அழகாக அதை வெளியீடு செய்வதிலும் பல இன்னல்களை சந்தித்தேன் அது மட்டுமல்லாது நான் தனியார் கம்பனி ஒன்றில் பணி புரிந்து வருகிறேன். எனவே யூடியூபுக்காக நேரம் ஒதுக்குதல் என்பது மிகப்பெரிய சவாலாகவே இருக்கிறது.

**07) எந்தவொரு காரணத்திற்காக இவ் களத்தினை தேர்வு செய்தீர்களோ அதன் எதிர்பார்ப்பை தற்போது பூர்த்தி செய்ய முடிந்துள்ளதா?**

நிச்சயமாக எனது குறிக்கோளும், இலக்குகளும் மெல்ல மெல்ல அடைந்து கொண்டு வருகிறது என நினைக்கிறேன். ஏனெனில் ஆரம்ப காலத்தில் அங்கத்தவர்களில் இருந்து ஒரு வருடத்தில் கிட்டத்தட்ட 4,300 அங்கத்தவர்கள் திகழ்விழியுடன் இணைந்திருக்கிறார்கள் என்னுடைய யூடியூப் தளத்திற்கு பலர் அவர்களது கருத்துக்களை பதிவு செய்கின்றார்கள். தங்களுடைய பிரதேசத்திற்கு வந்தமைக்காக வாழ்த்து கூறுகின்றனர். சிலர் அவர்களுடைய பிரதேசங்களுக்கு வந்து காணொலிகளை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறார்கள். இவை எனக்கு மிகப்பெரிய ஆர்வத்தை மென்மேலும் ஏற்படுத்துகிறது.

**08) தற்காலத்தில் இவ் டிஜிற்றல் உலகத்தினை பலரும் தங்களது திறமைக்கான களமாக தேர்வு செய்து அங்கீகாரம் கிடைக்க போராடி வருகின்றனர். இது குறித்து உங்களது கருத்து யாதாக உள்ளது?**

டிஜிற்றல் உலகம் மட்டுமல்ல பொதுவாகவே திறமைக்கான அங்கீகாரம் கிடைக்க பல தடைகளை தாண்டி, பயிற்சி பெற்று நம்மை நாமே ஊக்குவிக்கும் நேர்மறையான மனப்பாங்கு கொண்டிருக்க வேண்டும். அதற்காக பல காலம் காத்திருக்க கூட நேரலாம். எனவே பொறுமையும், உழைப்பும் இருந்தால் நிச்சயமாக வென்றிடலாம் என நான் நம்புகிறேன்.

**09) இத் துறை மீதான உங்களது பயணத்திற்கு உறுதுணையாக இருப்பவர்கள் பற்றி?**

என்னுடைய எல்லா முயற்சிகளுக்கும் உறுதுணையாக இருப்பவர் என்னுடைய சிறந்த நண்பர், வருங்காலகணவராகிய தர்ஷன் ஸ்ரீகுமார். ஒரு சிறந்த காணொலியை வழங்குவதற்கான அனைத்து வித வழிகாட்டல்களையும் எனக்கு வழங்கி உள்ளார். இன்று நானே ஒரு இடத்திற்கு தனியாக சென்று தயக்கமின்றி கதைத்து, ஒளிப்பதிவு செய்து, அதை அழகிய வெளியீடாக வழங்குவதற்கான நுட்பங்களையும் கற்று தந்துள்ளார். இந்த தருணத்தில் அவருக்கு மிகப்பெரிய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**10) இனி வருங்காலத்தில் இத்துறையில் உங்களது தூரநோக்கு எவ்வாறாக உள்ளது?**

புதுவிதமான நுட்பங்களை கையாள உள்ளேன். காலத்திற்கு ஏற்றாற்போல் சில வித்தியாசமான விடயங்களை யூடியூப் தளத்தின் ஊடாக வெளிக் கொணரலாம் எனவும், என்னைப் போலவே ஆரம்பக் கட்டத்தில் இருக்கும் யூடியூப்பாளர்களுக்கு உதவும் வகையிலான செயற்திட்டங்கள் சிலவற்றையும் சேர்க்கலாம் என எண்ணியுள்ளேன்.

**11) இத்துறைத் தவிர, வேறு துறையிலான உங்களது திறமைகள் குறித்து?**

பரதநாட்டியத்தில் நாட்டம் உண்டு. பல நிகழ்ச்சிகளையும் செய்துள்ளேன். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் பரதநாட்டிய பயிற்சிகளை மேற்கொண்டு வருகிறேன். அத்தோடு கைவினைப் பொருள்கள் செய்வதில் மிகுந்த ஈடுபாடு உண்டு. தாமரா க்ரியேஷன் எனும் பெயரில் சிறு கைத்தொழில் ஒன்றையும் மேற்கொண்டு வருகிறேன்.

**12) நிறைவாக, இன்று பல பெண்களும் ஒவ்வொரு துறைகளில் தங்களது திறமைகளின் மூலம் அடையாளத்தைப் பெறுவதற்கு முயற்சித்து வருகின்றார்கள். இது குறித்து உங்களது அனுபவத்தினூடாக கூற விரும்புவது?**

உழைப்பும், பொறுமையும் மிக முக்கியமான ஒன்று. எதிலும் தளராமல் உங்களுக்கான அடையாளத்தை தேட போராடினால் மாத்திரமே நாளை உங்களது வெற்றியில் நீங்கள் பூரண மகிழ்ச்சியைப் பெற முடியும். எனவே தளராது ஓய்வின்றி உங்களுக்கான அங்கீகாரத்தை நீங்களே உருவாக்கிடுங்கள்.

# ஆயரின் பெயரில் அமைந்து அரும்பணியில் ‘பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்’ நிறுவனம்

## யாழ் ஊடக அமையத்துடன் இணைந்து புதிய ஊடகப்பணிகள் – 02

- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)

**இலக்கம் 891 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் மற்றும் இலக்கம் 84 ஏ இராசாவின் தோட்டம் வீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இயங்கும் யாழ் ஊடக அமையம் ஆகிய இரு நிறுவனங்களும் இணைந்து பல ஊடகப் பணிகளை ஆற்றவுள்ளது. இப்பணிகளை விளக்கும் நோக்குடன் கடந்த வாரம் வெளியிடப்பட்ட ஆக்கத்தின் இரண்டாவது பகுதி இதுவாகும்.**



‘பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம்’ என்ற 300 பக்கங்கள் கொண்ட முதல் நூலை 2001 ஆம் ஆண்டு கத்தோலிக்க அச்சக மண்டபத்தில் மூத்த செய்தியாளர் நடேசபிள்ளை வித்தியாதரன் அவர்கள் நூலாசிரியரின் தாயார் அமரர் சவரிப்பிள்ளை மரியாம்பிள்ளை உடையாரிடம் கையளிக்கிறார்.

### விருது பெற்ற ஊடகவியல் நூல்கள்

(03) 2003 - 2003ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ‘மின்னியக்க பத்திரிகை இயல் - ஓர் அறிமுகம்’ என்ற நூல் 2004 ஆம் ஆண்டு இலங்கை இலக்கிய பேரவையினால் வழங்கப்பட்ட இலக்கிய சான்றிதழ் விருதை பல்துறைப் பிரிவில் பெற்றது. இலங்கை இலக்கிய பேரவையின் தலைவர் மற்றும் செயலர் ஒப்பமிட்ட சான்றிதழ் 16 டிசெம்பர் 2003ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

(04) இதே ‘மின்னியக்க பத்திரிகை இயல் - ஓர் அறிமுகம்’ என்ற நூல் இலங்கை அரச இலக்கிய விருது 2004 இல் மொழி நூல்கள் ஆய்வுத் துறையில் இலங்கை அரசு இலக்கிய விருது பெற்றது. தலைவர், இலங்கை கலைக்கழகம் - தலைவர், இலக்கிய குழு - பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியோர் ஒப்பமிட்ட சான்றிதழ் 05 ஒக்ரோபர் 2004ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.


ஆசிரியத்தலையங்கம் ஓர் அறிமுகம் என்ற 180 பக்கங்கள் கொண்ட 10ஆவது நூலின் பிரதியை யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபனிடம் இருந்து தொம்மையப்பு யேசுதாசன் சந்திரன் அடிகளார் பெற்றுக் கொண்டார்.

(05) 2001 - 2001ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ‘பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம்’ என்ற நூல் 2002ஆம் ஆண்டு இலங்கை இலக்கிய பேரவையினால் வழங்கப்பட்ட இரசிகமணி கனக செந்திநாதன் இலக்கிய சான்றிதழ் விருதை ஆய்வுசார் பிரிவில் பெற்றது. இலங்கை இலக்கியப் பேரவையின் தலைவர் செங்கை ஆழியான் மற்றும் செயலர் செம்பியன் செல்வன் ஆகியோர் ஒப்பமிட்ட சான்றிதழ் 2002ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

(06) 2001 - வடக்கு கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் அமைச்சினால் நடத்தப்பட்ட இலக்கிய நூல் பரிசுத் தெரிவில் ‘பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம்’ என்ற நூல் தமிழ் இலக்கிய விழா 2001இல் பிறதுறைப் பிரிவில் விருது பெற்றது. வடகிழக்கு மாகாண செயலர் திரு.ஆர்.தியாகலிங்கம் அவர்களால் ஒப்பமிடப்பட்ட சான்றிதழும் விருதும் 12 டிசெம்பர் 2002 அன்று திருகோணமலையில் வழங்கப்பட்டது.

(07) 12 நூல்களுக்கான விருது - 2019 கம்போடியா நாட்டின் சியாம் ரீப் நகரில் கம்போடிய அரச கலை கலாசாரத்துறை மற்றும் பன்நாட்டு தமிழர் நடுவம் மற்றும் அங்கோர் தமிழ் சங்கம் இணைந்து முனைவர் முரசு நெடுமாறன் கம்போடிய அரச விருது - 2019.

(08) 12 நூல்களுக்கான விருது - 2020 சர்வதேச யுனிசெவ் கவுன்சில் வழங்கும் வாழ்நாள் சாதனையாளர் விருது 2020

### பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் மூலம் வெளியிடப்பட அச்சில் உள்ள நூல்கள்

அச்சில் 08 நூல்கள் உள்ளன. 4 நூல்கள் முழுமையாக அச்சுச் செய்யப்பட்டும் கொரோனா நோய்த் தொற்று நெருக்கடி காரணமாக வெளியிடப்படவில்லை.

(01) 2020 விசேட செய்தி அறிக்கையிடல்.

(02) 2021 அச்சில் பதித்த ஆக்கங்கள் இயல் - 01

(03) 2021 அச்சில் பதித்த ஆக்கங்கள் இயல் - 02

(04) 2021 அச்சில் பதித்த ஆக்கங்கள் இயல் - 03

(05) 2021 திரும்பி பார்க்கிறேன் என் பத்திரிகைப் பயணப் பாதையை

(06) 2021 பத்திரிகையியல் ஆரம்ப படிகள் (குமரன் பதிப்பக வெளியிடு)

(07) 2021 பாதுகாவலன் ஆசிரியப்பணி அனுபவங்கள்

(08) 2021 பத்திரிகைத் தமிழ் அடிப்படைகள்

### ரீ.சி.என்.எல் இணையத்தளம்

தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா (ரீ.சி.என்.எல். என்ற இணையத்தளம்) இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க இணையத்தளம் என்ற பெருமையுடன் 26 நவம்பர் 2011ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

தமிழ் கத்தோலிக் செய்தி லங்கா-ரீ.சி.என்.எல். இணையத்தளத்தின் அறிமுக விழா 26 நவம்பர் 2011 அன்று பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரில் அதன் இயக்குநர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் தலைமையில் நடைபெற்றது.

அப்போதைய யாழ்ப்பாணம் மறைமாவட்ட குரு முதல்வர் தற்போதைய யாழ்ப்பாணம் ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு இணையத் தளப்பணிகளை ஆரம்பித்து உரையாற்றும் போது -

இலங்கையில் தமிழ்க் கத்தோலிக்க செய்திகளைப் பார்வையிடுவதற்காக முதன் முதலாக ஒரு இணையத்தளம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த இணையத்தளம் இலங்கையின் எல்லா மறைமாவட்டங்களின் தமிழ் கத்தோலிக்க செய்திகளையும் அறிக்கையிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. - என்றார்.

2011ஆம் ஆண்டு பொதுவான இணையத்தளங்கள் அதிகம் இல்லாமல் முகநூல் பாவிப்பும் மிகவும் குறைவாக இருந்த போது தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா - ரீ.சி.என்.எல். இணையத்தளம் இலங்கையின் முதல் தமிழ் கத்தோலிக்க இணையத்தளம் என்ற பெருமையுடன் குறிப்பாக புலம்பெயர் நாடுகளில் சிறப்புப் பணி ஆற்றியது

### 20012இல் ரீ.சி.என்.எல். ரீவி

2012இல் தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா (ரீ.சி.என்.எல்.) ரீவி. பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர் இயக்குநர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரின முயற்சியில் 2012 ஆம் ஆண்டு முதல் 2016ஆம் ஆண்டு வரை தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா ரீ.சி.என்.எல் ரீ.வி என்ற தொலைக்காட்சி சேவை எல்.பி.என். கேபிள் சேவை மூலமாக நடத்தப்பட்டது.

காலைக்கதிர்
Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
கிறிஸ்தவ செய்தி
- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -
(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம்; ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர் - யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)



நேரலை பத்திரிகையியல் ஓர் அறிமுகம் என்ற 282 பக்கங்கள் கொண்ட 13ஆவது நூலின் பிரதியை நூலாசிரியர் யாழ் ஆயரிடம் கையளிக்கிறார்.

காலை 06 மணிக்கு காலைச் செபம் திருப்பலிப்பூசை எனத் தொடங்கிய நிகழ்ச்சிகள் நாள் முழுவதும் நடைபெற்று இரவு 11 மணிக்கு நிறைவுற்றது.

இவற்றைவிட யாழ் நகரின் விசேட கத்தோலிக்க விழாக்களான புனித மரியன்னை பேராலயம் - பாசையூர் - குருநகர் - மானிப்பாய் - பண்டத்தரிப்பு - கச்சத்தீவு - பாலதீவு - மணடைக்கல்லாறு - மண்டித்தளை போன்ற விழாக்களையும் வேறு பல முக்கிய நிகழ்வுகளையும் யாழ் ஆயரின் கிறிஸ்மஸ் - புது வருட - ஈஸ்டர் திருப்பலிகளை நேரடியாகவும் ஒளி பரப்பி வந்தது.

காலப்போக்கில் இந்தியா தமிழ் நாட்டு கத்தோலிக்க ஆயர் பேரவையின் மாதா தொலைக்காட்சி மற்றும் யாழ் டான் தொலைக்காட்சியின் ஹோலி மேரி ஒளி பரப்பு என்பவற்றின் வருகையாலும் நிதி நிலையை ஈடு செய்ய முடியாமலும் எல்.பி.என். கேபிள் சேவை மூலம் நடத்தப்பட்ட தமிழ் கத்தோலிக்க செய்தி லங்கா ரீ.சி. என்.எல். ரீ.வி தொலைக்காட்சி சேவை 2016ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டது.


‘புலனாய்வு அறிக்கையிடல்’ என்ற 212 பக்கங்கள் கொண்ட 10ஆவது நூலின் முதற் பிரதியை யாழ் பல்கலைக்கழக ஊடகவிரிவுரையாளர் கிருத்திகா தர்மராஜா போராசிரியர் சிவலிங்கராஜாவிடம் பெற்றுக் கொள்கிறார்.

# ஜனாதிபதி மற்றும் பிரதமர் அரசுக்கு எதிராக வவுனியாவிலும் போராட்டங்கள் முன்னெடுப்பு






ஜனாதிபதி மற்றும் பிரதமர் அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து வவுனியாவிலும் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் வுனியா பழைய பஸ் நிலையம் முன்பாக இந்தப் போராட்டம் நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்றது.

வவுனியா, பூந்தோட்டம் சந்தியில் இருந்து கறுப்பு கொடிகளுடன் கோட்டா – ரணில் அரசாங்கத்துக்கு எதிராக கோஷங்களை எழுப்பியவாறு சைக்கிளில் வந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், பழைய பஸ் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவாகவும், கொழும்பில் நடைபெறும் போராட்டத்துக்கு ஆதரவாகவும் மடுகந்தை மற்றும் ஈரப்பெரியகுளம் ஆகிய பகுதிகளில் இருந்தும் ஊர்வலமாக வருகை தந்த மக்கள் மேற்படி போராட்டக்காரர்களுடன் இணைந்து அரசாங்கத்திற்கு எதிராகக் கோஷம் எழுப்பினர். இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், 'பொருளாதார நெருக்கடிக்கு தீர்வை முன்வை, அத்தியாவசிய உணவுப் பொருள்களைக் கொண்டு வா, நிறுத்து நிறுத்து விலையுயர்வை நிறுத்து, உழைக் கும் மக்களை பட்டினி போடாதே, கடனுக்குள் தள்ளி யோர் உல்லாச வாழ்வு நாட்டு மக்கள் பட்டினச் சாவு, விவசாயிகளை வாழவிடு, கோட்டா – ரணில் வீட்டுக்கு போ' எனக் கோஷங்களை எழுப்பியிருந்தனர்.

## இலங்கையின் நிலைவரங்களை உன்னிப்பாக அவதானிக்கிறோம்

### பிரித்தானியா அறிவிப்பு

இலங்கையில் நடைபெற்று வரும் நிகழ்வுகளை உன்னிப்பாக அவதானித்து வருவதாக பிரித்தானியா தெரிவித்துள்ளது. அத்தோடு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்களும், பாதுகாப்பு படையினரும் இந்த சந்தர்ப்பங்களில் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் பிரித்தானியா வலியுறுத்தியுள்ளது.

தலைநகர் கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் வலுப்பெற்றுள்ள நிலையில் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் சாரா ஹுல்டன் மற்றும் அந்நாட்டு வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தாரிக் அஹமட் ஆகியோர் டுவிட்டர் பதிவொன்றை இட்டு இதனைத் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் இடம்பெற்றுவரும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்பில் டுவிட்டரில் பதிவிட்டுள்ள உயர்ஸ்தானிகர் சாரா ஹுல்டன், "இலங்கையில் நடக்கும் நிகழ்வுகளை பிரித்தானிய அரசு மிகவும் உன்னிப்பாக கவனித்து வருகிறது. அமைதியான ஆர்ப்பாட்டமும், கருத்து சுதந்திரமும் இலங்கையின் ஜனநாயகத்துக்கு இன்றியமையாதது." – என்று குறிப்பிட்டுள்ளார்.

இதே வேளை இது தொடர்பில் பிரித்தானிய வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் தனது டுவிட்டர் பதிவில் , "இலங்கையின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. அமைதியான போராட்டங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுபவர்கள் மற்றும் பாதுகாப்பு படையினர் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். ஒன்றிணைந்து செயல்படுவதன் மூலம் தீர்வுகளைக் காண முடியும்." – என்று குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9 மணி முதல் அமுலாகும் வகையில் கொழும்பின் சில பொலிஸ் பிரிவுகளுக்கு பொலிஸ் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டதையடுத்து, அத்தியாவசிய தேவைகளை தவிர்த்து இலங்கைக்கு பயணிப்பதை தவிர்த்துக் கொள்ளுமாறு பிரித்தானியா பயண எச்சரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளரும் பதவிவிலகல்!



ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சுதேவ ஹெட்டியாராச்சி பதவி விலகியுள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் பணிப்பாளர் நாயகம் சுதேவ ஹெட்டியாராச்சி தனிப்பட்ட காரணங்களுக்காக இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## அடுத்த வாரம் மருத்துவத்துறை நாட்டில் முடங்கும் அபாய நிலை!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

வைத்தியர்கள் உள்ளிட்ட சுகாதார ஊழியர்களின் போக்குவரத்துபிரச்சினைக்குத்தீர்வுகாணப்படாவிட்டால் அடுத்த வாரத்தில் இருந்து முழு சுகாதார சேவையும் முடங்கும் அபாயம் உள்ளது.

இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் உடனடியாகத் தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் வைத்தியர் தர்ஷன சிறிசேன தெரிவிக்கையில் –

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக வைத்தியர்கள் உள்ளிட்ட சுகாதார ஊழியர்களுக்கு எரிபொருள் பெற்றுக்கொள்வதில் பாரிய சிக்கல் நிலை தோன்றியுள்ளது.

இதன் காரணமாக சுகாதார ஊழியர்களுக்கு போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்தி முறையான வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுக்கிறோம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு காண தற்போதைய அரசாங்கத்தால் முடியாது எனத் தோன்றுகிறது. அனைவரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய பொதுவான வேலைத்திட்டத்துக்கு ஒன்றிணைவது இந்தத் தருணத்தில் மிகவும் முக்கியமானது.

இந்த நிலையில், நாட்டின் பொருளாதார நெருக்கடி நிலையைக் கருத்தில் கொண்டு அனைத்து அரசியல் கட்சிகளும் நாட்டைப் பற்றி சிந்தித்து பொதுவான வேலைத்திட்டத்துக்கு ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். என்றார்.

### ஊடகவியலாளர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மீது முதலில் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதில் காயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு அழைத்து செல்வதற்காக சென்ற நியூஸ்பெஸ்ட்டின் ஏனைய ஊடகவியலாளர்களான காளிமுத்து சந்திரன், சானுக்க வீரகோன் ஆகிய இருவர் மீதும் விசேட அதிரடிப் படையினரால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலை மேற்கொள்வதற்கு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ரொமேஷ் லியனகே கட்டளை வழங்கியுள்ளார்.

இதேவேளை, காயங்களுக்குள்ளான ஊடகவியலாளர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

ஊடகவியலாளர்கள் இவ்வாறு தாக்குதலுக்கு இலக்கானது தொடர்பில் பல் வேறு தரப்பினரும் தமது கண்டனங்களை வெளியிட்டு வருகின்றனர். பிரதமர் அலுவலகமும் இதற்குக் கவலை தெரிவித்துள்ளது.

அரசைப் பாதுகாப்பதற்காக நிறுத்தப் பட்டுள்ள பாதுகாப்புதுறை அதிகாரிகள் 'நியூஸ்பெஸ்ட்' ஊடகவியலாளர்கள் மீது மேற்கொண்ட கொடூரமான மனிதாபிமானமற்ற தாக்குதலைக் கண்டிக்கின்றேன் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மேற்படி ஊடகவியலாளர்கள் தாக்கப் பட்டமை தொடர்பில் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ரொமேஷ் லியனகே உள்ளிட்ட ஏனைய மூன்று அதிகாரிகளும் உடனடியாகப் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் இவர்களுக்கு எதிராகக் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

### பந்துலவும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியில் இருந்து விலகுகின்றார் எனவும், நாடாளுமன்றத்தில் சுயாதீனமாகச் செயற்படப் போகின்றார் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை ஏற்கனவே 'மொட்டு'க் கட்சி இழந்துள்ள நிலையில், பந்துலவின் வெளியேற்றமும் அக்கட்சிக்குப் பெரும் பின்னடைவாகக் கருதப்படுகின்றது.

### கோட்டா, ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த பல ஆண்டுகளாக மக்களை அடக்குமுறையில் ஆழ்த்திய அரசு, தவறுகளைத் திருத்தி சரியான முடிவுகளை எடுக்க வேண்டும் எனப் பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும், உரிய தீர்மானத்தை உடனடியாக எடுக்காததால் நாடு அராஜக நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

இறுதியில் நாட்டு மக்கள் ஒன்றுதிரண்டு போராட்டத்தை முன்னெடுத்துள்ளமையுடன், ஜனாதிபதி செயலகமும் ஜனாதிபதி மாளிகையும் போராட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்பதுடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் அப்பதவியை வகிக்க மக்களின் ஆணை இல்லை.

நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக அனைவரும் ஏற்றுக்கொள்ளும் சர்வகட்சி அரசு உடனடியாக ஸ்தாபிக்கப்படுவதற்கு ஜனாதிபதியும் பிரதமரும் தமது பதவிகளை இராஜிநாமா செய்ய வேண்டும் என்பதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு.

24 மணித்தியாலங்களுக்குள் ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்பதுடன், அனைத்துக் கட்சிகளையும் ஒன்றிணைத்து அரசை அமைக்குமாறு அழைப்பு விடுத்து பிரதமரும் பதவி விலக வேண்டும் என்பதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தீர்மானம் – என்றார்.